Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு
THE EELA NADU

தேசீய தினசரி National Tamil Daily
மலர் 8 (19 8-66) இதழ் 190

பராபவ ஆவணி 3 ஜ: அவ்வ 2 வெள்ளிக்கிழமை




### கிரிக்கெட் டெஸ்ட்
### மேற்கிந்தியா. 268

ஓவல் (லண்டன்) ஆக. 18

இங்கிலாந்துக்கும் மேற்கிந்தியாவுக்கும் இடையே ஆரம்பமான ஐந்தாவதும் இறுதியுமான கிரிக்கெட் டெஸ்ட்டில் மேற்கிந்தியாவே முதலில் அடுப்பெடுத்தாடியது மேற்கிந்தியாவின் அடுப்படி ஆட்டம் ஆரம்பத்தில் மிகவும் மோசமாகக்காணப்பட்டது.

**ஸ்கோர் விபரம்**

மேற்கிந்தியா கோஷ்டி 268 ரன்களைப் பெற்று ஆட்டம் இழந்தது.

# "சபைக் கலைப்புக்கு கட்சி காரணமல்ல"

## உண்மையான பக்தியில்லையேல் எதுவுமே 'நடக்காது' யாழ்ப்பாண மக்களின் அன்பை மறவேன்'

### மணிவிழாவில் கி. வா. ஜ. பேச்சு

யாழ்ப்பாணம், வெள்ளி

'ஆண்டவனுக்கு உருவம் கிடையாது என்று சொல்லமுடியாது. தீயைத் தனியாகக் காட்டமுடியாததுபோல இறைவனை உருவமற்று நாம எண்ணமுடியாது. உள்ளத்தில் இறைவனை நினைப்பதற்கு அவனுக்கு ஒரு வடிவம் தேவைப்படுகிறது. உண்மையான பக்தி இல்லையேல் எதுவுமே நடக்காது.'

இவ்வாறு கி. வா. ஜகந்நாதன் யாழ்ப்பாணம்வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் யாழ்ப்பாணத்து மக்களால் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த மணிவிழாவில் நன்றி தெரிவித்துப் பேசுகையில் கூறினார்.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. கி. வா. ஜ. மேலும் பேசுகையில் கூறியதாவது;

எதுவித கைமாறையும் கருதாமல் தாய் தன் குழந்தைக்கு வேண்டியதைக் கொடுக்கிறாள். இறைவன் தாயைவிட மேலானவன் எது எது நமக்குத் தேவையோ அதையெல்லாம் நமக்குத் தருபவன் அவன்.

**ஆரியமும் தமிழும்**

ஆரியமும் தமிழும் இரு கண்கள். இதனை நாம் நன்கு உணரவேண்டும். மந்திரம்

(8-ம் பக்கம்பார்க்க)

## யாழ். மாநகரசபை விவகாரம்: நீதிமன்றத்துக்கு மந்திரி பதில்

கொழும்பு, வியாழன்

யாழ்ப்பாணம் மாநகரசபையைக் கலைத்ததற்கு அரசியல் நோக்கமோ, தமிழரசுக் கட்சியின் தூண்டுதலோ கிடையாது என்று ஸ்தலஸ்தாபன அமைச்சர் திரு. எம். திருச்செல்வம். யாழ்ப்பாண மாநகரசபை கலைக்கப்பட்டதை செல்லுபடியாகாதென்று தீர்ப்பளிக்குமாறு கோரி மாநகரசபையின் முன்னாள் மேயர் நீதிமன்றத்தில் தாக்கல்செய்திருந்த மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்தவற்றுக்குப் பதிலாக நீதிமன்றத்தில் நேற்றுச்சமர்ப்பித்த விளக்க மனுவில் தெரிவித்துள்ளார்.

வாதிதரப்பினர் சமர்ப்பித்த மனுவுக்கு விளக்கம் கூறும்முகமாக அமைச்சரும் ஸ்தலஸ்தாபனசேவைக் கமிஷனரும் நேற்று நீதிமன்றத்தில் மனு சமர்ப்பித்தனர்.

"யாழ்ப்பாண மாநகரசபையின் நிர்வாகச் சீர்கேடு பற்றி நேரிலும் எழுத்து மூலமாகவும் யாழ்ப்பாண வரியிறுப்பாளர்கள் புகார் தெரிவித்ததைத் தொடர்ந்து, மாநகரசபை நிர்வாகம் பற்றி நேரில்சென்று விசாரணைசெய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஸ்தல ஸ்தாபனசேவைக் கமிஷனருக்கு உத்தரவிட்டேன். அதன்படி ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷனர் யாழ்ப்பாணத்துக்குச் சென்று மாநகரசபை நிர்வாகம்

(5-ம் பக்கம் பார்க்க)

## பரந்தனில் வானொலி அலை நிலையம்

### ஜே. ஆர். அடிக்கல் நாட்டுவார்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படவிருக்கும் வானொலி ஒலிபரப்பு நிலையத்திற்கான அலைநிலையம் பரந்தனில் அமைக்கப்படவிருக்கிறது. திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வரும் ராஜாங்க அமைச்சர் பரந்தன் அலை நிலையத்திற்கு அஸ்திவாரக்கல் நாட்டுவார்.

அலைநிலையத்துக்கான நிலம் தெரிவுசெய்யப்பட்டுவிட்டது. எல்லைகளைவகுத்து பூர்வாங்க வேலைகளைக் கவனிப்பதற்கான வானொலி தொழில்நுட்ப, என்ஜினியரிங் குழுவொன்று நேற்று யாழ்ப்பாணம் வந்தது.

வானொலி ஒலிபரப்பு நிலைய நிகழ்ச்சிகளை ஒலிபரப்பும் நிலையம் பண்ணையில் அமைக்கப்படவிருக்கிறது. அதற்கான காணி திரு. நெவில்ஜயவீரா அரசாங்க அதிபராக இருந்த சமயத்திலேயே வானொலிப் பகுதியினருக்குக் கையளிக்கப்பட்டது.

சதிவழக்கு

## "அவசியமென உணரும் போது பெண்பெயரைச் சொல்வேன்"

### குறுக்கு விசாரணைக்கு சந்திரசோமா பதில்

கொழும்பு, வியா

சதித்திட்டம் சம்பந்தமாக எயிற்றி இளப்பில் செனட்டர் டொரிக் டிசூசா தமக்குத் தெரிவித்த தகவலை பின்னர் வரிஜிதம் செய்த பெண்ணின்பெயரை தாம் இன்னமும் வெளியிடத் தயாராக இல்லையென்று சதிவழக்கின் முதலாவது சாட்சியான துறைமுகக் கமிஷனர் திரு. எம். சந்திரசோமா இன்றைய விசாரணையின்போதும் கூறினார்.

தேசிய அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு சதி செய்ததாகவும் இதை இவ்வருடம் பெப்ரவரி மாதம் 17-ம் திகதிக்கும் 22-ந் திகதிக்குமிடையில் நிறைவேற்றத் திட்டமிட்டிருந்ததாகவும் ஞானசீலதேரோ, முன்னாள் ராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ரிச்சார்ட் உடுகம உட்பட 23 பேர்மீது குற்றம்சாட்டித் தொடரப்பட்டுள்ள வழக்கு, கொழும்பு பிரதம மாஜிஸ்டிரேட் திரு. பி. ஜி. எஸ். டேவிட் முன்னிலையில் இன்றுகாலை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிராஸிக்கியூஷன் தரப்பின் முதலாவது சாட்சியான துறைமுகக் கமிஷனரும் துறைமுக கூட்டுத்தாபனசபைத் தலைவருமான திரு. எம். சந்திரசோமா இன்று. எதிரிதரப்பு வழக்கறிஞர்களால் தொடர்ந்தும் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

**இரண்டையும் ஒப்பு நோக்கினேன்**

"பெயரை வெளியிடமாட்டேன் என்றுஅப்பெண்ணுக்கு நான் அளித்த வாக்குறுதியையும், எதிரிக் கூண்டில் நிற்கும் எதிரிகளுக்கு வழங்கப்பட வேண்டிய நீதிநியாயத்தையும் சீர்தூக்கிப் பார்த்தேன். அதன் பின்னரும்கூட அந்தப் பெண்ணின் பெயரை இன்னமும் வெளியிடுவதில்லையென்ற முடிவுக்கே வந்தேன்" என்று திரு. சந்திரசோமா தனது சாட்சியத்தில் கூறினார்.

"பெயரைச் சொல்லாததன்மூலம் அந்தப் பெண்ணை நான் பாதுகாக்கவில்லை. அந்தப் பெண்ணுக்கு நான் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றவே நான் முயற்சி செய்கிறேன். என் மனச்சாட்சிக்கேற்ப நான் வாழ வேண்டும். அதுதான் எனக்கு முக்கியம்" என்று திரு. சந்திரசோமாகூறினார்.

எதிரி தரப்பு வழக்கறிஞர் திரு. ஜோர்ஜ் ராஜபக்ஸ சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்தார்.

"எதிரி தரப்பைத் தடைசெய்வதற்கு நான் வேண்டுமென்று எதையும் செய்யமாட்டேன். அந்தப் பெண்ணின் பெயரை வெளியிடச் செய்வதற்கு எதிரிதரப்பினர் பெருமுயற்சி செய்துள்ளனர்" என்று சாட்சி தெரிவித்தார்.

**அவசியமென நான் கருதினல்..:**

"அந்தப் பெண்ணின் பெயர் எதிரிதரப்பினருக்கு மிகமிக அவசியமென்ற எதிரிதரப்பு வாதத்தை நான் நம்பவில்லை. நீதி கிடைப்பதற்கு அந்தப் பெண்ணின் பெயரை வெளி

(5-ம் பக்கம் பார்க்க)

## "இரு நாடுகளையும் இணைக்கும் தமிழுணர்ச்சி ஓங்கிவளர்க"

— கி. வா. ஜ.

யாழ்ப்பாணம், வெள்ளி

'இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே கடலிருந்து இரண்டு நாடுகளையும் வேறு பிரித்தாலும், தமிழுணர்ச்சி என்ற ஒன்று பிரிவின்றி இணைக்கிறது. அந்த இணைப்பு மேலும் மேலும் ஓங்கி வளரவேண்டுமென்று இறைவனை இறைஞ்சுகிறேன்.''

என்றிவ்வாறு கி. வா. ஜ. அவர்கள் நேற்று திருச்சியிலிருந்து பலாலி விமானநிலையத்தில் இறங்கியதும் வெளியிட்ட செய்தியில் குறிப்பிட்டுமேலும் கூறியதாவது:

"இறைவன் திருவருளால் மீண்டும்இலங்கை மண்ணைத் தீண்டும்பேறு கிடைத்திருக்கிறது. அன்பர்களின் அன்பே என்னை ஈர்த்தது. நான் ஆண்டு முதிர்ந்தவன் என்பதை அவர்கள் நினைத்து, எனக்கும் அவர்களுக்கும் உள்ள அன்பு முதிர்ந்ததாகக் கொள்ளுகின்றார்களே யன்றி, நான் பயனற்றவ

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### தேவை

சமையற் காரர்

தோசை, இடியப்பம், வடை, மோர் தயாரிப்பதற்குத் திறமைவாய்ந்த ஒருவர் அல்லது குடும்பமாயிருப்பவர் தேவை. அவருக்கு வேண்டிய வசதிகள் செய்துகொடுக்கப்படும். இ. து. கணேசலிங்கம், தேநீர்க் கடை, மீசாலை போஸ்ட். 856

வேலை:

அரசாங்கத்தில் 18 வருடங்களுக்கு மேல் (கிளாஸ் 2) குமாஸ்தாவாகக் கடமையாற்றிச் சமீபத்தில் இளைப்பாறிய, மணமான, 41 வயது நிரம்பியவர். தகுதிக்கேற்ற வேலை பார்க்க விரும்புகின்றார். அதிக சம்பளம் எதிர்பார்க்கவில்லை. கணக்கு, தட்டெழுத்தில் திறமையும் அனுபவமும் உண்டு. எல்லாக் கார்களும் ஓட்டும் லைசென்ஸ் உண்டு. மேலாக நேர்மையுண்டு. பிரதானமாக வான் விற்பனையாளராக (Sales Representative) வேலை செய்ய விரும்புகின்றார். விரும்புவோர் விளம்பர இல: 860, 'ஈழநாடு' மே/பா. என எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும். 860

### விற்பனைக்கு

கார்:

ஏ 40-கேம்பிறிஜ்- ஈ என் 6000 சீறிஸ். 20-ம், 21-ம் திகதிகளில் காலை 7 மணி தொடக்கம் மாலை, 5 மணி வரையும் பார்வையிடலாம். க. சண்முகதாசன், பெரிய அரசடி, கண்டிரோட், சாவகச்சேரி. 862

## ராஜா

(யாழ்ப்பாணம்)

தினசரி 4-45, 7-00, 9-45

போயா தினங்களில் 4 காட்சிகள்

THE FLESH AND THE FIENDS

(ADULTS ONLY)

## நியூ காலிங்கன்

(இணுவில்)

தினசரி 6-30, 9-30 மணி

விடுமுறை தினங்களில் 2-30 மணி

சிவாஜி - சாவித்திரி

நடித்த

கப்பலோட்டியதமிழன்


## வானொலி

### கொழும்பு

19-8-66 வெள்ளி

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

844 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீட்டர் & 49 மீட்டர்

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்ப இசை.

844 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 படத்திலிருந்து.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 முத்திநெறி சைவ சஞ்சிகை, 7-15 பாட்டு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 பேச்சு - தஞ்சாவூர் பெரியகோவில் - பேராசிரியர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், 9-30 தேர்ந்த இசை, 10-00 நேயர் விருப்பம்.


REGAL—JAFFNA

NOW SHOWING

Alain Delon

Ann Margret

in

ONCE A THIEF

(MGM'sPanavision) Adults Only)

## மகாத்மா தியேட்டர்

(நெல்லியடி)

தினசரி 6-30, 9-30 மணி

"பூமாலை"

பி.ப. 4 மணிக்கு மட்டும்

THE HELLIONS

(Color-Scop)


# "தொழிலாளர்கள் சகல உரிமையும் பெற்று வாழவேண்டும்"

யாழ்ப்பாணம், வியா.

"தென்னிலங்கைத் தொழிலாளர்களும் வட இலங்கைத் தொழிலாளர்களும் இணைந்து, சகல உரிமையும் பெற்று வாழ்வதற்கு வழிவகுப்பதே எமது சங்கத்தின் நோக்கமாகும்.

ஐக்கிய தேசியக்கட்சியின் ஆதரவிலுள்ள தேசீய ஊழியர் சங்க யாழ் கிளையில் யாழ்ப்பாண மின்சார ஊழியர்கள் இணைந்துகொண்ட ஆரம்பக்கூட்டத்தில் தாய்ச் சங்கப் பிரதிநிதி திரு. மகிந்த ரணசிங்கா பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர். ஆனைப்பந்தி உயர்கலைப் பாடசாலையில் இக்கூட்டம் நடைபெற்றது.

தேசிய ஊழியர் சங்க யாழ். கிளைத் தலைவர் திரு. எஸ். யூ. சோமசேகரம் தலைமை வகித்துப்பேசுகையில் கூறியதாவது:

தொழிலாளர்கள் சிறுசிறு சங்கங்களாகவும், பிரிவுகளாகவும் வேறுபட்டிராமல் ஒரு ஆளும் கட்சியின் கீழ் உள்ள சங்கத்தில் அங்கத்துவம் வகித்தால் தமது உரிமைகளை வெகுசுலபமாகப் பெறமுடியும். தேசிய ரீதியில் இச்சங்கம் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதால் எப்பிரச்னைகளும் தொழிலாளர்களைப் பாதிக்கமாட்டாது.

யாழ் மாநகரசபையின் மின்சாரப் பகுதி ஊழியர்களும் இ. போ. ச. ஊழியர்களும் இச்சங்கத்தில் அங்கத்துவம் வகிக்க முன்வந்துள்ள காரணத்தால் அவர்களுடைய குறைபாடுகளும், பிரச்னைகளும், நிர்வாகமுறைகளும் சிறந்த முறையில் நடைபெறுவதற்கு இச்சங்கம் வழிகோலுகிறது.

தாய்ச் சங்கத்தின் அமைப்புக்காரியதரிசியான திரு. எஸ்.ஏ.ஜி. யாப்பா பேசுகையில், "இச்சங்கத் தொழிலாளர்களின் பிரச்னைகள் நியாயமானதாகக் காணப்பட்டால் அதைத்தீர்த்துவைக்க இன்றைய அரசாங்கம் என்றுமே பின்நிற்காது. இலங்கை முழுவதும் உள்ள தொழிலாளர்கள் வேறுபாடின்றி சமத்துவத்தைப் பாதுகாக்கவே நாம் இலங்கை முழுவதும் இப்படியான சங்கங்களை ஸ்தாபித்து வருகிறோம். சிங்களவர் தமிழர்கள் பேதமின்றி உரிமைகள் வழங்க இன்றைய அரசாங்கம் எப்பொழுதும் விழிப்புடன் இருக்கிறது என்றார்.

தாய்ச்சங்கத்தின் பிரதிநிதி திரு. மகிந்தா ரணசிங்க பேசுகையில், தென் இலங்கைத் தொழிலாளர்களும், வட இலங்கைத் தொழிலாளர்களும் ஒன்று சேர்வதற்கும், ஒத்துழைப்பதற்கும் இச்சங்கம் வழிவகுக்கிறதென்றும் குறிப்பிட்டார்.

கூட்ட ஆரம்பத்தில் நடைபெற்ற நிர்வாகசபைத்தெரிவில் தலைவராக திரு. எஸ். பாலசுப்பிரமணியமும், உபதலைவராக திரு. வி. கோபாலசிங்கமும், செயலாளராக திரு. ஆர். செல்வநாயகமும், உபசெயலாளராக திரு. ஜே. எல். சி. புவிராசசிங்கமும், தனாதிகாரியாக எஸ். மயில்வாகனமும். அங்கத்தவர்களாக எஸ். கந்தசாமியும், பி. தவசியும் தெரிவு செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம்செய்யவிருக்கும் ராஜாங்க மந்திரியை வரவேற்பதெனவும் இச் சங்கம் தீர்மானித்தது.

## சேமிப்பின் அவசியம்

வட்டுக்கோட்டை, வியா.

வட்டுக்கோட்டை ஐக்கிய நாணய சங்கத்தின் நான்காவது வருடாந்தக் கூட்டம் திரு. அ. தே. வேதாபரணம் தலைமையில் திருஞானசம்பந்த வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

திரு. தா. சிவகுருநாதரின் சேவையை அங்கத்தவர்கள் பாராட்டிப் பேசினர். திரு. அ. தே. வேதாபரணம் பேசுகையில் சங்கத்தில் சேர்ந்த அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் மாதாந்தம் பெறும் ஊதியத்தில் ஒருபகுதியை சேமிப்பில் சேர்க்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

திரு. க. சிவகுருநாதர் பேசுகையில், ஐக்கிய சங்கத்தில் சேமிபதன்மூலம் எதிர்பாராத அத்தியாவசிய தேவைகளுக்கும், கமச் செய்கை, சிறுகைத் தொழில் முதலிய அபிவிருத்திகளுக்கும் இப்படியான சேமிப்புப்பணங்கள் சமயசஞ்சீவிபோல் உதவும் என்பதை வலியுறுத்திக் கூறினர்.

## பௌர்ணமிதின கலைநிகழ்ச்சிகள்

### கலைஞருக்கு அறிவிப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

பௌர்ணமி தினத்தன்று யாழ்ப்பாணம் திறந்தவெளியரங்கில் நடைபெறும் கலை நிகழ்ச்சிகள் சம்பந்தமாக யாழ். மாநகரசபை ஆணையாளர் கலைஞர்களுக்கும் பொது மக்களுக்கும் தெரிவித்துள்ள அறிவித்தலில் இசை, நடன நாடக நிகழ்ச்சிகளுக்கான சன்மானம் பற்றியும் இவற்றை நடத்துவதற்காகச் செய்யப்படவேண்டிய விண்ணப்பங்கள் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இசை நிகழ்ச்சிகளுக்குக் கௌரவப்பணமாக ரூபா 25 வழங்கப்படும். நடன நிகழ்ச்சிகளுக்கும் இத்தொகையே கொடுக்கப்படும். நாடகங்களுக்கு அல்லது கதம்ப நிகழ்ச்சிகளுக்கு கௌரவப் பணமாக ரூ. 50 கொடுக்கப்படும். நிகழ்ச்சிகளில் கலந்துகொள்பவர்களுக்கு இப்பணத்தைத்தவிர வேறு எச்செலவுக்கும் பணம் தரப்படமாட்டாது. ஒப்பந்தத்தை மீறிய கலைஞர்களின் விண்ணப்பங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

## யாழ்ப்பாணத்தில்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

மந்திரி ஊர்வலமாக தமிழரசு வாலிப முன்னணி மகாநாடு நடைபெறும் காங்கேசன்துறை நகரசபை மைதானத்துக்கு அழைத்துச் செல்லப்படுவார். இரவு தமிழரசு வாலிப முன்னணி மகாநாட்டில் மந்திரி திரு. ஜே. ஆர். உரை நிகழ்த்துவார்.

அன்றிரவு, காங்கேசன்துறை 'ரெஸ்ட் கவு'ஸில் தங்கியிருப்பார். மறுநாள் 22-ம் திகதி [illegible] கொழும்பு திரும்புவார்.


## விளம்பரம்

Clerical Class II

மேற்கண்ட பரீட்சைக்கு கணக்குப் பதிவியல்(விசேட) வகுப்புக்கள் மாலை 5 — 7 வரை நடைபெறுகின்றது.

வர்த்தகக் கலாசாலை

230, கே.கே.எஸ். ரோட், யாழ்ப்பாணம் 928

## சரவணை கி. மு. சங்கம் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி

காலம்:- 24-8-66 வியாழக்கிழமை பி. ப. 2 மணியளவில்.

இடம்:- நாய்வெட்டி வாய்க்கால் "நாவலர்" மைதானம், சரவணை.

தரமான பரிசுகள் அளிக்கப்படும். பங்குபற்றுவோர் தனாதிகாரி திரு கு. பத்மநாதன் அவர்களிடம் 5 ரூபா பிரவேசப்பணம் கட்டி ரசீற் பெற்றுக்கொள்ள வேண்டும்.

பிரவேசப்பணம் அன்று பி. ப. 1 மணி வரையும் ஏற்கப்படும்.

இ. நகுலேசபிள்ளை,
929 தலைவர்.

## கேள்வி விளம்பரம்

### மத்திய நூல்நிலையக் கட்டிடம் அமைத்தல்

1966-ம் ஆண்டு ஆகஸ்டு (ஆவணி) மாதம் 29-ம் திகதி திங்கட்கிழமை காலை 9-00 மணி வரையும் வட்டுக்கோட்டை ஊர்மன்ற அக்கிராசனரால் பதிவுசெய்யப்பட்ட கொந்திராத்துக்காரர்களிடமிருந்து "மத்திய நூல் நிலையக் கட்டிடம் அமைக்கும் வேலைக்கு" சீல் வைக்கப்பட்ட கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் 28-8-66-ம் திகதி முற்பகல் 11-30 மணி வரையும் ரூபா 25/- ரெண்டர் பணமாகவும், ரூபா 2/- ரெண்டர் பத்திரப் பணமாகவும் கட்டுவதின்பேரில் வழங்கப்படும். ஏனைய விபரங்கள் யாவும் எனது கந்தோரில் அறிந்துகொள்ளலாம்.

(ஒப்பம்) இ. கந்தமுத்து,
பதில் தலைவர்.
வட்டுக்கோட்டை ஊர்மன்றம்.

ஊர்மன்ற அலுவலகம்,
வட்டுக்கோட்டை,
16-8-1966. 930

## இன்று

## குதூகல ஆரம்பம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீகிருஷ்ணா (திருமலை)

ரி. எம். சௌந்தரராஜன்

பி. எஸ். சரோஜா

எம். ஆர். ராதா, மனோகர், சாரதா, லட்சுமி, ராஜம்

மற்றும் பலர் நடித்த

# அருணகிரிநாதர்

இசை: வாலஞ்சென்ற ஜி. ராமநாதன், டி.ஆர். பாப்பா

டைரக்‌ஷன்: ராமண்ணா.

## யாழ். நகரமண்டபத்தில்

### இன்று மட்டும்!

பி. ப. 7-00 மணிக்கு மட்டும்

— தேவ் & தேவ் அளிக்கும் —

# பாச நிலா

யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்பட்ட

முதல் முழுநீள 16 மி. மீட்டர் தமிழ்ப் படம்

(பாதி கலரில் -காந்தஒலி)

(Processed in Germany — Sound Striped in Canada)]

நடிகர்கள்:

செல்வராஜன் - ரஞ்சி செல்வராஜன்

மனோகரன், ஜெயந்திரா

ஜடா தேவேந்திரன்

முதலியோர்

டிக்கட்: ரூபா 5, 3, 2.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானுக்கு அமெரிக்கா மீண்டும் ஆயுதம் வழங்குமா?

## அதிபர்ஜோன்ஸனுக்குஇந்திராவின் கடுமையான ஆட்சேபம்

புதுடில்லி, ஆக. 18

**பாகிஸ்தானுக்கு மீண்டும் அமெரிக்க யுத்த ஆயுதங்கள் கிடைக்கக்கூடிய சாத்தியங்கள்பற்றி பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அமெரிக்க ஜனதிபதி ஜோன்ஸனுக்கு கடுமையான ஆட்சேபக் குறிப்பொன்றை அனுப்பியுள்ளார்.**

பாகிஸ்தானுக்கு அமெரிக்கா ஆயுதங்கள் விநியோகிக்குமானால் அதனால் இந்தியாவின் பாதுகாப்புக்கு பெருத்த அபாயமாக முடியும் என்று சில தினங்களுக்குமுன் இந்திய வெளிவிவகார அமைச்சர் சர்தார் சுவரண்சிங் இந்திய பார்லிமெண்டில் அறிவித்திருந்தார். பாகிஸ்தான் சீனுவோடு நெருங்கிய சிநேகம் கொண்டிருப்பதாகவும் அது அமெரிக்காவிடமிருந்து பெற்றுக் கொள்ளும் ஆயுதங்களை இந்தியாவுக்கு எதிராகவன்றி வேறு எந்தநாட்டுக்கு எதிராகவும் பாவிக்க முடியாது என்ற கருத்துப்பட சர்தார் சுவரண்சிங் பார்லிமெண்டில் பேசினுர்.

தற்பொழுது பிரதமர் இந்திராகாந்தி ஜனதிபதி ஜோன்ஸனுக்கு தனிப்பட்ட முறையில் எழுதியுள்ள ஒரு கடிதத்தில் பாகிஸ்தானுக்கு அமெரிக்கா மீண்டும் ராணுவ தளபாடங்கள் வழங்கக்கூடிய சாத்தியங்கள்பற்றி இந்தியாவின் ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளார்.

பிரதமர் இந்திரா ஜனதிபதி ஜோன்ஸனுக்கு எழுதியுள்ள அக்கடிதத்தில் வியட்னும் நெருக்கடிகள்பற்றியும் குறிப்பிட்டார். வியட்னுமில் குண்டுவீச்சு தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும்வரை சமாதானத்துக்கு இடமே இல்லை என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

### அமைதியை விரும்புகின்றனர்

தென்வியட்னுமில் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டு இந்தியா திரும்பியுள்ள அமெரிக்க தூதுவர் செஸ்டர்பவல்ஸ், தென்வியட்னும் மக்கள் அமைதியையே விரும்புகின்றுர்கள். ராணுவ நடவடிக்கைகள்மூலம் மட்டுமே அங்கு அமைதியை ஏற்படுத்துவது முடியாது. வியட்னுமில் ராணுவத் தளம் ஒன்றை அமைப்பது அமெரிக்காவின் நோக்கமில்லை. ஆனுல் சுதந்திரமான அரசாங்கம் ஒன்றை அந்த மக்கள் தெரிவுசெய்து கொள்வதையே அமெரிக்கா விரும்புகிறதென்று கூறியுள்ளார்.

## மாடுகளுக்கும் குடும்பக்கட்டுப்பாடு

புதுடில்லி, ஆக. 18

இந்தியப் பசுமாடுகள் மத்தியின் உற்பத்தி பெருக்கத்தைக் கட்டுப்படுத்த இந்திய அரசாங்கம் உத்தேசித்திருப்பதாக உணவு உபமந்திரி அறிவித்திருக்கின்றார்.

இந்தியாவில் அவசியமில்லாமல் உற்பத்தியாகும் உதவாக்கரை மாடுகளை ஒழிப்பதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக அவர் அறிவித்துள்ளார்.

## ஒரு அடி இடைவெளி

புருபோன்டீன் (தென் ஆபிரிக்கா) ஆக. 18

இங்குள்ள நீச்சல் தடாகத்துக்கு வெளியில் ஜோடிகளாய்க் காணப்படும் எவரும் குறைந்தது ஒரு அடியாவது தங்களுக்கிடையில் இடைவெளி வைத்துக்கொள்ள வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அனேகமாக ஒழுங்கீனமாக நடந்துகொள்வதே இந்த உத்தரவுக்குக் காரணம் என்று அதிகாரி யொருவர் கூறியுள்ளார்.

## 'சமயப்பணியில் இளைஞர் உழைக்கவேண்டும்'

அச்சுவேலி, வியாழன்

'மக்களிடையே சமயப் பற்று இப்போது குறைந்து வருவதுபோலத் தோன்றுகிறது. இந்நிலைமாறுவதற்கு இளைஞர்கள் முயற்சி மேற்கொள்ளவேண்டும்.

இவ்வாறு காரைநகர் இளைஞர் முன்னேற்றக் கழகக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கி உரை நிகழ்த்திய பிரம்மஸ்ரீ ஞானசம்பந்த சர்மா கூறினுர்.

அவர் மேலும் பேசுகையில் தேவார திருவாசகங்களை குருமுகமாக ஐயந்திரிபறக் கற்று மக்களிடையே அவற்றைப் பரப்பவேண்டும். இளைஞர் முயற்சி மேற்கொள்ளவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

பின்வருவோர் கழகத்தின் புதிய உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. நா. ஞானசம்பந்தசர்மா, காரியதரிசி: திரு. சா. பரமேசுவரசர்மா, தனதிகாரி. திரு. எஸ். சிவானந்தன், உபதலைவர் திரு. க. க. சுப்பிரமணியம். 10 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

# சூரியனைச் சுற்றிவர ஒரு கிரகம்

## அமெரிக்கா அனுப்பியுள்ளது

வாஷிங்டன், ஆக. 18

அமெரிக்கா இன்று சூரியனைச் சுற்றிவருவதற்கான ஒரு செயற்கைக் கிரகத்தை விண்வெளிக்கு நேற்று அனுப்பிவைத்தது.

'பயனியர் 7' என்ற இந்த செயற்கைக்கிரகம் சூரியனைச் சுற்றிவரும் வேளையில் சூரியமண்டலத்தின் நிலைமை குறித்தும் கதிரியக்கங்களின் தாக்கங்கள் குறித்தும் புதிய தகவல்களைப் பூமிக்கு அனுப்பும்.

எதிர்காலத்தில் விண்வெளியில் பிரயாணம் செய்து கிரகங்களில் இறங்க முயற்சிசெய்யும் விண்வெளி பிரயாணிகளுக்கு ஏற்படக்கூடிய கதிரியக்க அபாயங்கள் குறித்தும் இந்தப்புதிய கிரகம் தகவல்களைத்தரும். இதன்மூலம் விண்வெளிப் பிரயாணிகளுக்குக் கதிரியக்கத் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பு அளிப்பது பற்றிய ஆராய்ச்சியில் இறங்க விஞ்ஞானிகளுக்கு வசதியேற்படும்.

இந்தக் கிரகத்தின் எடை 140 ருத்தல். மணிக்கு 24 மைல் வேகத்தில் அது பிரயாணம் செய்கின்றது.

# அமெரிக்க குண்டு வீச்சினுல் வியட்னும் சிக்கல் தீர்ந்துவிடாது

## முன்னுள் பிரி. பிரதமர் கருத்து

லண்டன், ஆக. 18

வியட்னுமில் நடைபெற்று வரும் போரை அமெரிக்கா குண்டுவீச்சுகளினுல் முடிவு கட்டிவிட முடியாது என்று முன்னுள் பிரிட்டிஷ்பிரதமர் அவோன் பிரபு கூறியிருக்கின்றுர்.

''இந்தோசினுவின் அமைதியை நோக்கி...'' என்ற தமது புதிய புத்தகத்தை டெலிவிஷனில் அறிமுகப்படுத்தி அவோன் பிரபு (முன்னர் சேர் அந்தனி ஈடன்) பேசினுர். வியட்னுமில் ஏற்பட்டுள்ள சிக்கல்களை சண்டைமூலம் தீர்த்துவிட முடியாது என்று அவர் கூறினுர்.

வியட்னும், லாவோஸ், கம்போடியா ஆகிய நாடுகள் வல்லரசு சார்பற்றனையாக இருக்க வேண்டும் என்று அவோன் பிரபு தமது புதிய நூலில் குறிப்பிட்டிருக்கிறுர்.

அமெரிக்கா பல முகாம்களில் வெற்றி பெறக்கூடும். ஆனுல் அவர்கள் யுத்தத்தின்மூலம் அடையும்வெற்றிகள் மூலமாக அங்குள்ள சிக்கல்களைத் தீர்த்துவிட முடியாது என்ற ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர் கூறினுர்.

சண்டை எவ்வளவுக்கு நீடிக்கின்றதோ அவ்வளவுக்கு உலகில் அபாயம் அதிகரித்துக் கொண்டிருக்கின்றது என்றுர் அவர்.

# தெ. கிழக்காசிய எல்லைகளையும் மீறிய அபாயம் ஏற்படலாம்

## வியட்னும்நிலைமைகுறித்து கோஸிஜின்கருத்து

லண்டன், ஆக. 18

வியட்னுமில் தொடர்ந்து அமெரிக்கா ராணுவ கெடுபிடிகளில் இறங்கி வருமானுல் தென்கிழக்காசியஎல்லைகளையும் மீறிய அபாயகரமான ஒரு நிலைமை அதனுல் உருவாகும் என்று ரஷ்யப் பிரதமர் கொஸிஜின் கூறியிருக்கின்றுர்.

பிரிட்டிஷ் தத்துவஞானியான ரஸல் பிரபுவுக்கு திரு. கொஸிஜின் எழுதியுள்ள ஒரு கடிதத்திலேயே மேற்கண்ட கருத்தை அவர் வெளியிட்டிருக்கின்ஞர். ரஸல் பிரபு வியட்னும்போர் நிறுத்தம் சம்பந்தமாக முன்னர் எழுதியிருந்த ஒரு கடிதத்திற்கு திரு. கொஸிஜின் இப்போது பதிலளித்துள்ளார்.

## யு எஸ். விமானம் நொறுங்கியது

### 24 பேர் கொலை

ஹானுய், ஆக. 18

டானுங்கில் அமெரிக்க விமானம் ஒன்று விழுந்து நொறுங்கியதில் 24 தென் வியட்னுமியர் கொலையுண்டதாக அறிவிக்கப்படுகின்றது- விமானத்திலிருந்த 2 ஆயிரம் ருத்தல் குண்டு வெடித்ததாகவும் தானே இயங்கும் துப்பாக்கிகள் வெகு நேரம்வரை இயங்கிக் கொண்டிருந்ததாகவும்தெரிகின்றது. விமானி தப்பிவிட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## சுவீடனில் பொலிஸ் கொலை

கொதன்பேர்க் (சுவீடன்) ஆக.18

மத்திய சுவீடனில் ஒரு பொலிஸ்காரர் கொலை சம்பந்தமாகத் தேடப்பட்ட ஒரு மனிதன் ஒளித்துக்கொண்டிருந்த வீட்டுப்பூட்டை இயந்திரத்துப்பாக்கியால் சுட்டுத் தள்ளி, அவனைப் பொலிஸ்காரர் பலர் சூழ்ந்து கைது செய்தனர். கைது செய்யப்பட்ட சமயம் அவனிடம் இயந்திரத் துப்பாக்கி ஒன்றும், கைத்துப்பாக்கிகளும், ஆயுதங்களும் இருந்தன. ஹெலிக்கொப்டர்கள், இயந்திரப்படகுகள், துப்பறியும் நாய்கள் இவற்றின் உதவியுடன் நூற்றுக்கணக்கான பொலிஸ்காரர் இம்மனிதனைக் கைப்பற்றுவதில் ஈடுபட்டனர். (பி.டி.ஸி.)

## கொள்ளையடித்தனர்

புதுடில்லி, ஆக.18

இந்திய வட எல்லையில் ஒரு கிராமத்துக்குள் 30பேர் அடங்கிய பாகிஸ்தானிய கொள்ளைக் கோஷ்டி ஒன்று நுழைந்தது. ஒரு வீட்டில் கொள்ளையடிக்கச் சென்றதாகத் தகவல் கிடைத்திருக்கின்றது.

## கறுப்பர்களின் களியாட்டம்

வாஷிங்டன். ஆக. 18

சுமார் 50 நீக்கிரோக்கள் தெருவில் சென்ற கார்கள் மீதும் பொலிசார்மீதும் கற்களையும் வெடிகளையும் வீசியதன் விளைவாக 5 பேர் காயமடைந்தனர்.

ஒரு பொலிஸ்கார[illegible] தள்ளப்பட்டு புடைக்கப்பட்டார். 4 இளைஞர் ஆ[illegible]

# ரொடீஷியா விஷயத்தில் இந்தியாவின் நிலைமை

## ஸாம்பியா உபஅதிபர் திருப்தி

புதுடில்லி, ஆக. 18

இந்தியாவில் சுற்றுப்பிரயாணம்செய்துவிட்டுப் புறப்பட்டுச்சென்ற ஸாம்பியா உதவிஅதிபர் திரு. காமாங்கா இந்தியாவில் தமக்களிக்கப்பட்ட அமோக வரவேற்புக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

ரொடீஷியா விஷயத்தில் இந்தியாவின் நிலைமை குறித்துத் தாம் பெரிதும்திருப்தி கொண்டிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

பெரிய தலைவர்கள் மட்டுமின்றிப்பொதுமக்கள்கூடத் தம்மை அன்போடு வரவேற்று உபசரித்தது குறித்து அவர் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார். திரு. கமாங்காவும் ஸாம்பியா வெளிநாட்டு மந்திரியும் சீனுவில் சுற்றுப்பிரயாணம் செய்வதற்காகப் புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

[illegible]

# யாழ்ப்பாணத்தில் ஜே. ஆர். பங்குபற்றும் நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், வியா.

தேசிய அரசாங்கத்தின் ராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன வருகிற 22-ம் திகதி திங்கட்கிழமை காலை விமானத்தில் இங்கு வருகிறுர். காலை எட்டு மணிக்கு பலாலி விமான நிலையத்தை வந்தடைவார். தமிழரசுக் கட்சி வாலிப முன்னணி மகாநாட்டில் கலந்து கொள்வதற்காகவே ராஜாங்க மந்திரி இங்கு வருகிறுர்.

உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் உட்பட தமிழரசுக் கட்சி எம். பி. க்களும், பிரமுகர்களும் மந்திரியை விமான நிலையத்தில் வரவேற்பர். காலை 8-30 மணிக்கு விமான நிலையத்தில் வாலிப முன்னணியினர் மந்திரிக்கு வரவேற்பு அளிப்பர். 9 மணிக்கு இங்கிருந்து மயிலிட்டி வழியாக திரு. ஜே. ஆர். காங்கேசன்துறை கெஸ்ட் ஹவுஸை சென்றடைவார். இங்கிருந்து 10-00 மணிக்கு புங்குடுதீவுக்குச் செல்வார். 12 மணிக்கு நயினுதீவு அம்மன் கோவிலுக்கும், நாகவிகாரைக்கும் செல்வார். நெடுந்தீவில் 2 மணிக்கு மந்திரியின் மதியான போசனம் இடம்பெறும்.

மாலை 3-15க்கு ஊர்காவற்றுறையில் ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. நவரத்தினம் தலைமையில் மந்திரிக்கு ஒரு வரவேற்பு அளிக்கப்படும்.

இரவு காங்கேசன்துறை 'கெஸ்ட் ஹவு'ஸுக்கு மீண்டும் மந்திரி வருவார். பின்னர் இரவு எட்டு மணிக்கு வளலாய் 'கெஸ்ட் ஹவுஸில்' தமிழரசுத் தலைவர் டாக்டர் ஈ. எம். வி நாகநாதன் அளிக்கும் விருந்தில் கலந்து கொள்வார்.

மறுநாள் காலை 9 மணிக்கு மந்திரி முதல் நிகழ்ச்சியாக தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலை புதிய வார்ட்டைத் திறந்து வைப்பார். பின்னர் பகல் 10 மணிக்கும் 12 மணிக்குமிடையில் கோப்பாய், சாவகச்சேரி பகுதிகளில் அளிக்கப்படும் வரவேற்புகளில் மந்திரி கலந்து கொள்வார். மத்தியானம் 1 மணிக்கு யாழ்ப்பாணம் 'பாம்கோர்ட்டில்' மந்திரியின் மத்தியான போசனம் இடம் பெறும். 2-30 மணிக்கு கொக்குவிலில் நடைபெறும் வரவேற்பில் கலந்து கொள்வார். பின்னர் பிற்பகல் 2-45க்கு திறந்த காரில் பவனியாக தெல்லிப்பழைக்கு மந்திரி செல்வார். காங்கேசன்துறையிலிருந்து

(2-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

எழுந்திரு! உலகத் தேர் இயங்க உன்தோள் கொடுத்து உதவு. எத்தனை நாட்களுக்கு இந்த வாழ்வு? இவ்வுலகிலே மனிதனாய்ப் பிறந்ததற்கு ஏதேனும் ஒரு நினைவுச் சின்னத்தை விட்டுச் செல்லவேண்டும். இல்லையேல் உனக்கும் கல்லுக்கும் மரத்திற்கும் என்னதான் வேற்றுமை.

—சுவாமி விவேகானந்தர்.

# ஈழநாடு

EELANADU National Tamil Daily. Post Box 49 JAFFNA.
Telegrams : EELANADU Jaffna. Telephone : 839

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு ஆவணி மீ 3 உ (19-8-66)

## உணவு உற்பத்திக்கு வர்த்தகர் உதவி

உணவு உற்பத்தியைப் பெருக்குவதில் அரசாங்கத்திற்கு உதவி புரியும் திட்டத்தில் ஓர் அம்சமாக, வரண்ட பிரதேசத்தில் விவசாயச் செய்கைக்கு உதவக்கூடிய தூர்ந்து, சிதைந்து போன குளங்களைத் திருத்துவதென்று இலங்கை வர்த்தக சபை தீர்மானித்திருக்கிறது. டம்புள்ளையில் ஒரு குளத்தைத் திருத்துவதற்கான வேலைகள் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளது என்று வர்த்தக சபையைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்திருக்கிறார். வர்த்தகர்களின் இந்த முயற்சியை நாட்டு மக்கள் அனைவரும் பாராட்டுவர்.

உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்றும் உணவில் சுயதேவைப் பூர்த்தி கண்டுவிட்டால் உணவுக்காக வருடாவருடம் வெளிநாடுகளுக்குச் செல்லும் பெருந்தொகைப் பணத்தைக் கைத்தொழில் விருத்திக்கும் பயன்படுத்த முடியுமென்றும் பிரதமரும் இதர அமைச்சர்களும் அடிக்கடி தெரிவித்து வருகின்றனர். உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு சென்ற பல வருடங்களாக நிபுணர்களும் மற்றும் பலரும் ஆலோசனை தெரிவித்தும் திட்டங்கள் தீட்டியும் வந்துள்ளனர். ஆனல் அவை சரியான முறையில் செயல்படவில்லை. நமது உணவுத் தேவைக்கு இன்னமும் நாம் வெளிநாடுகளையே எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

தேசிய அரசாங்கம் தேசிய ஐக்கியத்தை உருவாக்கி வருவதன் மூலம் உணவு உற்பத்தியைப் பெருக்கவும் தொழில்களை விருத்தி செய்யவும் அதன்மூலம் நாட்டை முன்னேற்றவும் நல்ல வாய்ப்பு இருக்கிறது. மகாவலி கங்கையை வடக்கே திருப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறதென்று காணி அபிவிருத்தி மந்திரியும் பிரதமரும் சில தினங்களுக்கு முன் யாழ்ப்பாணத்தில் தெரிவித்தனர். மகாவலி கங்கையை வடக்கே திருப்புவதற்கு, கங்கை திரும்பிப் பாய வேண்டிய பாதைகளிலுள்ள பழைய குளங்களைத் திருத்தவேண்டியதும் அவசியமேற்படின் புதிய குளங்களை அமைக்க வேண்டியதும் அவசியம். காணி அமைச்சர் சி. பி. டி சில்வா யாழ்ப்பாணத்தில பேசுகையில் புதிய குளங்களை அமைக்க முன்வருபவர்களுக்கு அரசாங்கம் உதவி அளிக்கத் தயாராக இருப்பதாகத் தெரிவித்தார்.

இலங்கை ஒரு காலத்தில் ஆசியாவின் நற்களஞ்சியமாக விளங்கியது என்பதற்கு சரித்திரம் ஆதாரமாகவுள்ளது. அந்நாளில் இந்நாட்டை ஆண்ட அரசர்கள் குளங்களையும் வாவிகளையும் அமைத்தனர். இன்றும் அவை அவர்களின் பெயர்களுடன் விளங்குகின்றன. ஆனல் அந்நியர் ஆட்சியில் இக்குளங்கள் கவனிக்கப்படாததால் பலகுளங்கள் அழிந்து, சிதைந்து, தூர்ந்து போய் விட்டன. உணவு உற்பத்தியைப் பெருக்க முயற்சி செய்யும் இச்சமயத்தில் பழைய குளங்களைத் திருத்துவதும் புதிய குளங்களை அமைப்பதும் அவசியம்.

வாழ்க்கைச் செலவு உயர்வு அதிகரித்துவரும் இக்காலத்தில் வர்த்தகர் மீது, பொதுமக்களுக்கு பொதுவாக நல்லபிப்பிராயம் குறைவு. குளங்களைத் திருத்தி உணவு உற்பத்தித் திட்டத்துக்கு உதவி புரிய வர்த்தகர் சபை முன்வந்திருப்பது வர்த்தகர் மீது பொதுமக்களுக்கு நல்லபிப்பிராயத்தை ஏற்படுத்துவதுடன் அவர்களுடன் சேர்ந்து நாட்டின் முன்னேற்றத்துக்கு உழைக்கவும் பொதுமக்கள் முன் வரவும் வழி செய்யும்.

யாழ்ப்பாணத்திலும் பல குளங்கள் தூர்ந்து போயுள்ளன. யாழ்ப்பாணத்தில் தண்ணீர்ப் பஞ்சம் ஏற்படக் கூடுமென அஞ்சப்படும் இச்சமயத்தில் தூர்ந்துபோனகுளங்களைத் திருத்தி மழை நீர் வீணாகாமல் தேக்கிவைப்பதற்கு இங்குள்ளவர்த்தகர்களும் பொதுமக்களும் முன்வரவேண்டும்.

**புத்தளம்**

## மார்புநோய் ஆஸ்பத்திரியின் அவலநிலை

புத்தளம், வியா.

'புத்தளம் மார்பு ஆஸ்பத்திரிக்கு ஓர் இல்ல உத்தியோகத்தர் நியமிக்கப்படாமை. இங்குள்ள மருத்துவ அதிகாரியைத் தமது தொழில்நிர்வாக உதவிக்கு ஒரு அப்போதிக்கரியை நம்பியிருக்கச் செய்துள்ளது' என்று புத்தளம் பட்டின சபையின் மாதாந்தக் கூட்டத்துக்குத் தலைமைவகித்த உபதலைவர் திரு. எம். ஏ. எம். மொஹிதீன் கூறினர்.

புத்தளம் மார்பு ஆஸ்பத்திரிக்குப் பொறுப்பாகவுள்ள மருத்துவ அதிகாரி வாரத்தில் ஐந்து நாட்களுக்கு சிலாபம், மாரவில, நிக்கவரெட்டிய. கல்பிட்டிய ஆகிய இடங்களுக்குச் செல்வதாகவும், அச்சமயங்களில் தனது சொந்தக் காரியங்களைக் கவனிப்பதுடன், கூடவே மருத்துவ அதிகாரியின் இடத்தையும் அப்போதிக்கரிதான் நிரப்ப வேண்டியுள்ளதென்று அவர் தெரிவித்தார்.

மார்பு ஆஸ்பத்திரிக்கு இல்ல உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்க உடனடி நடவடிக்கை எடுக்குமாறு சபை ஏகமனதாகத் தீர்மானித்தது.

**உரும்பராய்**

## சிதம்பர சுப்பிரமணியர் மீது கி. வா. ஜ. பாடிய 'கதம்பம்' இன்று நிகழும் அரங்கேற்றம்

''பிரணவத்தின் தனிப்
பொருளாய்ப் பிரணவமே
வாகனமாய்ப் பிறங்கும்
அப்பன்
பிரணவத்தின் பொருளறியாப் பிரமாவைச்
சிறையிட்ட பெம்மான்
அன்று
பிரணவத்தைச் சிவனறிய
அறிவித்த குருநாதன்
பெரிய சாமி
பிரணவஞ் சொல் அன்பர்
பணி சிதம்பர சுப்
பிரமணியின் பெற்றி
வாழி''

—(கி. வா. ஜகந்நாதன்)

தமிழ் நாடு என்றும் முருக வழிபாட்டிற்கு பிரசித்தி பெற்றது கோலமாமயில் மீது குலவும் குழகன் என்றும், வேற்படையுடைய விமலன் என்றும், அரந்தை கெடுத்து வரந்தரும் இறைவன் என்றும் தமிழ்க் கடவுளராம் முருகனைப் போற்றுவர் தமிழ் மக்கள். அம்மரபையொட்டியே ஈழவள நாட்டிலும் தமிழ் மக்கள் முருகனுக்கு ஆலயம் அமைத்து, கந்தபுராணம் படிப்பித்து, அதன் பயன் கேட்டு அவ்வழி யொழுகி நின்றனர். யாழ்ப்பாணக் குடாநாட்டிலே உரும்பிராய் என்னும் கிராமத்தில் அவ்வூர் மக்களால் அமைக்கப்பெற்று சீரும் சிறப்புடனும் விளங்கியஆலயமே சிதம்பர சுப்பிரமணிய சுவாமி கோவிலாகும். இவ்வாலயத்துக்கு சிதம்பரசுப்பிரமணியசுவாமி ஆலயம் என்ற பெயர் வந்தது என்பது ஆராய்ச்சிக்குரிய விடயமாகும். யாழ்ப்பாண மக்கள் தமிழ் நாட்டிலேயுள்ள தில்லைச் சிற்றம்பலமாகிய சிதம்பர புண்ணிய தலத்தின் பேரில் கொண்ட பேரவாவினுல் இந் நாமத்தைச் சூட்டியிருக்கலாமோ என்ற வினு பலர் மனதிலும் எழுகின்றது. எது எப்படியிருப்பினும். அந்நாளில் சிதம்பர சுப்பிரமணிய சுவாமி கோவில் ஈழவளநாட்டின் சிறந்த ஆலயங்களில் ஒன்ருய் திகழ்ந்து. போத்துக்கீசர் காலத்தில், அவர்களுடைய மதவெயால் சிதைந்துச் சின்னபின்னமாக்கப் பெற்று இருந்த இடம் தெரியாமல் மறைந்தது. போத்துக்கீசருக்குப் பின்னர் இடம் பெற்ற ஆட்சியாளரின் உதவி சிறிதளவேனுமில்லாதபடியால் இக்கோயில் புனருத்தாரணம் செய்யப்படவில்லை. ஆனல் முருக வழிபாடு இரமமாக சிறிய அளவில் நடைபெற்று வந்ததெனலாம்.

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் சைவத் தமிழ் மக்களிடையே விழிப்புணர்ச்சியேற்பட்டது. புகழ் பெற்றதும் பாடல்பெற்றதுமான பல புண்ணிய தலங்கள் புனருத்தாரணம் செய்யப்பெற்றன உடும்பராய் சிதம்பர சுப்பிரமணிய சுவாமி கோயில் புனருத்தாரனமும் 1953-ம் ஆண்டு அவனின் திருவருள் துணையுடன் ஆரம்பமாகியது. முன்பு ஆலயத்தை நிர்வாகித்து வந்த தர்மகர்த்தாக்களிடமிருந்து சிதம்பர சுப்பிரமணிய சுவாமி கோயில் நிர்வாக சபையினர் ஆலய நிர்வாகத்தையேற்று, ஆலயத்தை புதிதாக நிர்மாணம் செய்ய முற்பட்டனர். மூட் காடாயும், பாம்புப் புற்றும் புதராயும் அமைந்த கோயில் நிலத்தை நன் நிலமாக்கி வேத சிவாகம முறைப்படி. கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், தம்ப மண்டபம், மகா மண்டபம் ஆகியவற்றோடு அமைந்த ஓர் ஆலயத்தை இந் நிர்வாக சபையினர் அமைத்தனர். இந் நிர்வாக சபையில் திரு. செ. தனபாலசிங்கம், திரு. கா. இரத்தினசிங்கம் போன்ற இளைஞர்கள் கடமையாற்றிய படியால் ஆலயத் திருப்பணி வெகு மும்முரமாக நிறைவேறியதென்ருல் அது மிகையாகாது. உரும்பராய் வாழ் சைவப் பெருங்குடி மக்களில் சான்றோர்களான உயர் திரு. செ. தியாகலிங்கம் போன்றவர்களின் அன்பும் ஆதரவும் இந்நிர்வாக சபையினருக்கிருந்தபடியால் 1953-ம் ஆண்டில் தொடங்கப் பெற்ற திருப்

(5-ம் பக்கம் பார்க்க)

## 'தவமுந் தவமுடையார்க்கு ஆகும்'

— பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை —

சைவப்பிரசாரகர் திரு. த. குமாரசாமிப்பிள்ளை அவர்கள் பூர்வஜன்மத்தவப் பேறுடையவர்கள்.

'மானிடப் பிறவிதானும்
வகுத்தது மனம்
வாக்காயத்
தானிடத் தைந்துமாகும்
அதன் பணிக்காக
வன்றோ
வானிடத் தவரு மண்
மேல் வந்தரன்றனை
யர்ச்சிப்பர்
ஊனெடுத் துழலுமூம
ரொன்றையும், உணராரதோ'

— சிவஞானசித்தியார்

இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்.

— ஆறுமுகநாவலர்

மனிதப் பிறவியின் நோக்கம் இது என்று தெரிவது அரிது; இளமையிலே தெரிவது அரிதிலும் அரிது.

பிள்ளையர்கள் பிறப்பின் நோக்கத்தை இளமையிலே தானே உணயாம் உணர்ச்சிகை வந்து, சைவசமாசாரத்தைப் பேணி, நித்திய கர்மானுஷ்டானங்களை மேற்கொண்டு, விபூதி, உருத்திராக்கம், பஞ்சாக்கர செபம் [illegible] டையவர்களாய்ச் சிவபுண்ணியங்களுள் உத்தமோத்தம புண்ணியமாகிய சிவ பூசையை எடுத்துக் கொண்டவர்கள். உண்மைநாயன்மார்களின் பெருமைகளையும் இறைவன் திருவிளையாடல்களையும் புகழ்ந்து பிரசங்கிப்பதும், தேவாரத் திருமுறைகளைப் பண்ணோடு ஓதுவதும், திருமுறைகளைப் பாராயணஞ் செய்வதும், புண்ணிய பொக்கிஷங்களாகிய புராணங்களுக்குப் பொருள் உரைப்பதுமாகிய புண்ணிய கருமங்களிலேயே பிள்ளையவர்களின் வாழ்நாள் பயன்பட்டு வந்திருக்கிறது.

அறிவு, ஒழுக்கம் என்கின்ற பயன்களுக்கு வெகு தூரத்ததான இக்காலக் கல்விக்கடலுள் ஆழ்ந்து கரை துறை தெரியாது தடுமாறுகின்ற மாந்தர்களுக்கு ஒரு கலங்கரை விளக்கம், பிள்ளை அவர்களின் சைவவாழ்க்கை. இவ்வாழ்க்கை மேலும் நீண்டகாலம் இந்த உலகுக்குப் பயன் செய்வதாக என்று இறைவன் திருவருளைப் பிரார்த்திப்போமாக.

(திரு. த. குமாரசாமிப் புலவருக்கு மதுரை ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் ''சிவகதாப்பிரசங்க பூஷணம்'' என்னும் பட்டத்தை சமீபத்தில் வழங்கிக் கௌரவித்தார்.)

# ஐயாறன் எழுதுவது

கொக்குவில் திரு. சு. குமாரசுவாமிப புலவர், ஐம்பது ஆண்டுகளாக சைவப்பணியும் தமிழ்ப்பணியும் செய்து, எழுபதாவது வயது பூர்த்தியடைந்ததை முன்னிட்டு, இன்று மாலை ஒரு பாராட்டு விழா, சைவபரிபாலனசபையின் ஆதரவில் நாவலர் மண்டபத்தில் நடைபெறுகிறது. அவருக்கு மதுரை ஆதீனத்தார் அளித்த ''சிவகதாப்பிரசங்க பூஷணம்'' எனும் பட்டமும் அச்சமயம் வழங்கி பொன்னுடையும் போர்த்தப்படுவதாக ஓர் அறிவித்தல் கிடைத்தது

ஈழம் பெருமைப்படக் கூடிய பெரியார்களுள் புலவரவர்கள் முக்கியஸ்தர்; சைவபோதனையில் மட்டுமன்றி சாதனையிலும் சிறந்தவர். வாழ்க்கையில்பெரிய சோதனைகள் ஏற்பட்டும் இறை அருளால் அதைப் பொருட்படுத்தாமல், எப்போதும் இன்பமாகவும் மனத்திருப்தியுடனும் இருக்கின்றார் வயது எழுபதாகியும் உள்ளம் என்றும் இளமையாகவே உள்ளது. அவர் நீடுழி வாழ்க!

ஃ ஃ ஃ

சங்கானைப்பட்டினத்திலே இன்று மின்விளக்கேற்று விழா. அழைப்புக் கிடைத்தது. முதல்முதலாக மின் ஒளியைப் பெறும் அவ்வூர் மக்களைப் பாராட்டுகிறேன்.

சங்கானைப்பட்டினசபைத் தலைவரான திரு சி. க. திருச்சிற்றம்பலம் ''ஈழநாடு'' ஆசிரியர் குழுவைச் சேர்ந்தவரென்பதைப் பெருமையுடன் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். ''ஈழநாடு'' ஊழியர் யாரும் கட்சி அரசியலில் ஈடுபடக்கூடாதென்பது விதி. அவர் பட்டினசபைத் தலைவராக, போட்டி இன்றி ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டதை அறிய மகிழ்ச்சியாக இருந்தது. அடக்கமும், திறமையும் வாய்ந்த அவர் தலைமையில் சங்கானை மக்கள் இன்னும் பல நன்மைகளை அடைவரென்பதில் ஐயமில்லை.

ஃ ஃ ஃ

முந்தாநாள் ஓர் அன்பர் வந்து ''கி. வா. ஜ. வருவது நிச்சயந்தானு? வந்தபின் விழா, நிகழ்ச்சி நிரல்களை வெளியிடலாமல்லவா?'' என்று கேட்டார். கேட்டதும் ஒரு மாதிரியாக இருந்தது. ஏற்கெனவே சில மகாநாடுகளுக்கு இந்தியாவிலிருந்து சில அறிஞர்கள் வருவதாகச் சொல்லி, கடைசிநேரத்தில் எதிர்பாராத தடை ஏற்பட்டு வராமலிருந்திருக்கிருர்கள். அதுபோல்ஏற்பட்டுவிடுமோ என்று தோன்றியது. ஆனல் இறை அருள் இருக்கும் போது தடைகள் தலைதூக்குமா!

காலை 11-10-க்கு வர வேண்டிய விமானம் பத்து நிமிடம் முன்பாகவே பத்திரமாக வந்துசேர்ந்தது. மலைநாடு, கிழக்குமாகாணம், வடக்கு மாகாணம், தென்னிலங்கை முதலிய ஈழத்தின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் பல அன்பர்கள் விமானநிலையத்தில் காத்திருந்து, மலர் மாலைகள் போட்டு பாதத்தில் விழுந்து கும்பிட்டு கி. வா. ஜ. வை வரவேற்ருர்கள்.

ஃ ஃ ஃ

அவ்வளவு பேரையும் பெயர் சொல்லி அழைத்து சுகம் விசாரித்தார். அவருடன் துணைவியாரும், மற்றும் இரு அன்பர்களும் வந்துள்ளனர். ஒருவரை ''என். ராமகிருஷ்ணன்'' என்று அறிமுகம்செய்துவைக்கையி

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிதம்பரசுப்பிரமணியர். . . .

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பணி வேலைகள் 1958-ம் ஆண்டு முற்றுப் பெற்று குடமுழுக்காட்ட ஆயத்தமாயிற்று.

சிதம்பர சுப்பிரமணியரின் குடமுழுக்கு வைபவம் 1958-ம் ஆண்டு பங்குனித் திங்கள் 26-ம் நாள்...

உரும்பராய் சிதம்பர சுப்பிரமணிய சுவாமியின் பேரில் தீராக்காதல் கொண்ட கலைமகள் ஆசிரியர் வித்துவான் கி. வா. ஜகந்நாதன் அவர்கள் சுவாமி பேரில் பித்துப் பிரபித்தங்கள் கொண்ட 1020 பாடல்களை பாடியருளியுள்ளார். உரும்பிராய் சிதம்பர சுப்பிரமணியன் பாமாலையில் சிதம்பர சுப்பிரமணியன் உயிர்வருக்கமாலை, சிதம்பர சுப்பிரமணியன் சேவடி மாலை, அபிஷேக மாலை, அர்ச்சனை மாலை, ஈழமொழி மாலை, தூதுமாலை, இருசீர் பதிற்றுப்பத்தந்தாதி, முச்சீர் பதிற்றுப்பத்தந்தாதி, நாற்சீர் பதிற்றுப்பத்தந்தாதி, வெண்பா அந்தாதி ஆகியவை இடம் பெறுகின்றனர் அப்பாமாலையிலிருந்து இதோ ஒரு பாடல்:-

"செங்கமலத்தாள் நிலவும் சீரார் உரும்பிராத்
திங்கள்முக மாறுடைய
சிதம்பரசுப் பிரமணியா
பொங்கு மன்பின் நீபோந்த புனித முறுவானதியாம்
கங்கை நறு நீர் கொணர்ந்
தோம் காட்சிதர ஆடியருள்"

இலங்கையில் புராதன தலங்களில் ஒன்றான உரும்பராய் சிதம்பர சுப்பிரமணிய சுவாமி கோயில் தன் பழைய நிலைக்கு வர எத்தனிப்பது ஒரு மகிழ்ச்சிகுரிய விடயமாகும். ஆலய திருப்பணியில் இன்னும் பல திருப்பணி வேலைகள் எஞ்சியுள்ளன. முக்கியமாகக் கோயிலுக்குரிய திருக்குளத்தைத்தேடி, தோண்டி புனருத்தாரனம் செய்வது அவசியமாகின்றது. எல்லாம் வல்ல இறைவன் இப்பணிகளனைத்தையும் நிறைவேற்றி அடியார்கட்கு திருவருள் பாலிப்பானாக!

வாழ்க சிதம்பர சுப்பிரமணியன் புகழ்!

அம்புய மாமலர் ஆதவன் செங்கதிரால் மலர்வாயிது போல் வெம்பிய என்மனம் நின்னருளின் கதிர்மேவவிரிந்திடுமோ பம்பிய ஈழமணித்திருநாட்டி லுரும்பராய் பண்ணவினைவம்பறு நீப சிதம்பர சுப்பிரமண்ணிய நாயகனே.

—ம. கணேசமூர்த்தி

## ஜயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

லேயே ஒரு சிலேடை. "இவர் என் ராமகிருஷ்ணன்" என்று தன்னைச் சுட்டிக்காட்டிக்கொண்டார். திரு. ராமகிருஷ்ணன் தமிழகத்தில் புகழ்பெற்ற எழுத்தாளர். மிராசுதார். "இந்து", "கலைமகள்" முதலிய பத்திரிகைகளில் பல தென்னாட்டு ஸ்தலங்களைப் பற்றி அருமையான ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதியுள்ளார் பத்து வருடங்களாக இலங்கை வர முயன்றாராம். இப்பொழுதுதான் வர முடிந்ததென்று மகிழ்ச்சியுடன் சொன்னார்.

மற்றொரு அன்பர் கண்ணன். சென்னையில் திறமை மிக்க புகைப்படக் கலைஞர். சுமார் இருவார காலம் ஈழத்தில் தங்கி பல இடங்களுக்கும் சுற்றுப்பிரயாணம்செய்வரென்று அறிந்தேன்.

கி. வா. ஜ. வந்ததும் வானம் மப்பும் மந்தாரமுமாக இருந்தது. வெகுநாட்களாக நாம் எதிர்பார்க்கும் மழையும் வருமா?

ஃ ஃ ஃ

சென்னையில் நடந்த மணிவிழா வைபவங்களைப் பற்றி விசாரித்தேன். "நான் ஓர் அரசியல் தலைவனுமல்ல, சினிமா நடிகனுமல்ல. என்றாலும் ஏராளமான மக்கள் கூடியிருந்து ஆசியும் கூறி, அன்பும் பொழிந்தனர். எல்லாம் திருவருள் செயல்" என்று அக்கூட்டங்களில் கூறியதாக அடக்கத்துடன் தெரிவித்தார் கி. வா. ஜ.

ஃ ஃ ஃ

சுழலார் துயர் வெயிற் சுட்டிடும்போதடித் தொண்டர் துன்னும், நிழலாவன வென்று நீங்காய் பிறவி நிலை கெடுத்துக் கழலாவினைகள் கழற்றுவ காலவனங் கடந்த அழலார் ஒளியன காண்க ஜயாறன் அடித்தலமே.

—அப்பர்சுவாமிகள்.

## "அவசியமென. .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விட வேண்டியது அவசியமென நான் கருதினால் அல்லது உணர்ந்தால், அந்தப் பெயரை வெளியிடுவது பற்றிப் புனராலோசனை செய்வேன் சாட்சிக் கூண்டில் நின்று அந்தப் பெண் தாமாகவே சாட்சியமளித்தால் அதில் எனக்கு ஆட்சேபம் எதுவும் இல்லை" என்று திரு. சந்திரசோமா வழக்கறிஞரின் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

"17-ம் திகதி இரவு எனக்கு டெலிபோன்செய்த அந்தப் பெண் தாமாகவே தான் டெலிபோன் செய்து பேசினார். நான் அதை எதிர்பார்க்கவில்லை. அது எனக்கு ஆச்சரியமாகவும் இருந்தது" என்று சாட்சி கூறினார்.

எதிர் தரப்பின் மற்றொரு வழக்கறிஞர் சாட்சியை மேலும் குறுக்குவிசாரணை செய்தபொழுது அந்தப் பெண்ணின் அடையாளத்தை வெளியிடக்கூடிய எந்தக் கேள்விக்கும் தாம் பதிலளிக்க மறுப்பதாகத் தெரிவித்தார்.

## இரு நாடுகளையும. . .

(1-ம் பக்கத் தொடர்ச்)

றுகி வருகின்றேன் என்று எண்ணவில்லை. இறைவன் அருளே இத்தகைய பேரன்பை எனக்குக்கிடைக்கும்படி செய்கிறது."

"இலங்கையிலுள்ள அன்பர்களுடைய தமிழன்பையும் இறையுணர்வையும் பாராட்ட முந்துபவன் நான். ஆகவே இங்கு எத்தனைமுறை வந்நாலும் அவர்களுடைய அன்பு நாளுக்கு நாள் வளர்ந்துவருவதையே பார்க்கின்றேன். நான் இலங்கையன்பர்களுக்கென்று தனியே ஏதும் தொண்டு செய்ததில்லை. ஆயினும் கைமாறு உதவாத பேரன்புடையவர்களாக அவர்கள் இருக்கின்றார்கள்" என்று உணர்ச்சிவசப்பட்டுச் சொன்னார்.

விமானநிலையத்தில் திரு. எஸ். தியாகலிங்கம் தம்பதிகளும் மற்றும் இலங்கையின் பல பாகங்களிலிருந்து அன்பர்களும், மணி விழாச் சபையினரும் வந்திருந்து மாலைகள் சூட்டி வரவேற்றனர்.

## இசைவிழா

யாழ்ப்பாணம், வெள்ளி

சங்கீத அபிவிருத்திச் சங்கத்தினரின் இரண்டாவது இசைவிழா அராலி இந்துக் கல்லூரி மண்டபத்தில் இன்று மாலை ஆரம்பமாகிறது. நீதியரசர் திரு. ஸ்ரீஸ்கந்தராசா விழாவை ஆரம்பித்துவைப்பார். விழா இம்மாதம் 24-ம் [illegible] நடைபெறும்.

## கழிவுப்பொருட்களில் இ.போ.ச லாபம்

கொழும்பு, வெள்ளி

பாவனைக்குத்தகுதியற்ற டயர்கள், மற்றும் உதிரிப் பாகங்களின் விற்பனையால் இ.போ. சவுக்கு கடந்த இரண்டுவருடங்களில் ரூ. 40 லட்சம் கிடைத்துள்ளது. இதில்பழைய பஸ்களின்விற்பனைமூலம்கிடைத்த தொகை ஏறத்தாழ 2 1/2 லட்சம் ரூபாய் ஆகும்.

லொறிசஸியின் இறக்குமதி தடைசெய்யப்பட்டபின், இ. போ. ச. வின்பழைய சஸிகள் அதிகவிலையைப்பெற்றுள்ளதாகத் தெரிகிறது.

## சபைக்கலைப்புக்கு .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பற்றி சபைக் கூட்ட அறிக்கைகளுட்பட தஸ்தாவேஜுகளைப் பரிசீலனைசெய்து விசாரணை செய்தார். மே மாதம் 29-ந் திகதி காலை ஸ்தலஸ்தாபனக் கமிஷனர் என்னை வந்து சந்தித்து அன்று மாலை தனது விசாரணை முடிவுகளை ஓர் அறிக்கையாகச் சமர்ப்பித்தார். அந்த அறிக்கைக் கிணங்க மாநகரசபை நிர்வாகத்தை நடத்த சபைக்கு தகுதியில்லை என்பதைத் தெரிந்து சபையைக்கலைக்க உத்தரவு பிறப்பித்தேன்" என்று அமைச்சர் தமதுமனுவில் தெரிவித்துள்ளார்.

நிர்வாகச் சீர்கேடுகாரணமாக சபையை ஏன் கலைக்கக் கூடாதுஎன்பதற்கு விளக்கம் கூறும்படி மேயரையும் அங்கத்தவர்களையும், சட்டப்படி கேட்கவேண்டிய அவசியமில்லையாயினும் நான் கேட்டிருப்பேன். ஆனால் சபையை உடனடியாக கலைக்கவேண்டிய அவசியம் நேர்ந்ததால் அதற்கு இடமில்லாது போய்விட்டது" என்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷனர் சமர்ப்பித்துள்ள விளக்கத்தில் 1966-ம் ஆண்டின்தொடக்கத்தில் நியமிக்கப்பட்ட சபையின் நிரந்தரக் குழுக்களைக் கலைத்து புதிய குழுக்களை நியமித்தது மின்சார என்ஜினியர் பதவியை மீண்டும் ஏற்படுத்தியது, சபையின் அங்கீகாரம் பெறாமல் வேலையாட்களை நியமித்தது, டெண்டர்முறைகளைச் சரிவரப்பின்பற்றத் தவறியது போன்றபல காரணங்களை சபையின் நிர்வாக ஊழல்களைக் காட்டியது எனத்தெரிவித்துள்ளார்.

# பஸ்-சைக்கிள் மோதல்: இளைஞர் ஸ்தலத்தில் மரணம்

### ஆறுகால் மடத்தடியில் பரிதாப சம்பவம்

யாழ்ப்பாணம், வெள்ளி

மானிப்பாயிலிருந்து யாழ்ப்பாணம் வந்துகொண்டிருந்த இ.போ.ச. பஸ்ஸும் சைக்கிளில் வந்துகொண்டிருந்த இளைஞர் ஒருவரும் ஆனைக்கோட்டை ஆறுகால் மரத்தடிக்கு சமீபத்தில் மோதிக்கொண்டதால் சைக்கிளில் வந்த 18 வயது இளைஞரான நவரத்தினம் சிங்கராஜா என்பவர் ஸ்தலத்திலேயே மரணமானார்.

இப்பரிதாப சம்பவம் நேற்று அதிகாலையில் இடம்பெற்றது. சிங்கராஜா ஓட்டிவந்தசைக்கிள் கடுமையான மோதலுக்குள்ளானதால் துண்டு துண்டாக சிதைக்கப்பட்டது. அவர் விபத்து நடைபெற்ற இடத்திலிருந்து சுமார் 50 யார் தூரத்துக்கு பஸ்ஸினால் இழுத்துச் செல்லப்பட்டதாக அறியப்படுகிறது.

இது சம்பந்தமாக பஸ் சாரதி மாரிமுத்து நாகராஜாவைப் பொலிஸார் கைது செய்து காவலில் வைத்துள்ளனர். பொலிசார் மேலும் விசாரணை செய்து வருகின்றனர்.

# தாயகம் திரும்புவோர் மறுவாழ்வு பிரச்னை

### இந்திய அதிகாரிகள் ஆலோசனை

புதுடில்லி, ஆக. 18

இந்தியாவுக்கு இலங்கையிலிருந்து திரும்பிவரவிருக்கும் இந்திய வம்சாவளியினரின் மறுவாழ்வு குறித்து இன்று இந்திய மறுவாழ்வு துறை காரியதரிசி பல்வேறு ராஜ்யங்களையும் சேர்ந்த அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தினார். இலங்கையிலிருந்து திரும்பி வருபவர்களை விவசாயத்துறைகளிலும் கைத்தொழில்துறைகளிலும் ஈடுபடுத்துவதுபற்றிகருத்துகள் பரிமாறிக்கொள்ளப்பட்டன.

இலங்கையிலிருந்து திருப்பி அனுப்பப்படவிருக்கும் இந்திய வம்சாவளியினர் பற்றி இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகள் நடத்த இந்திய மத்திய அரசாங்கத்தின் அதிகாரிகளும் தமிழ்நாட்டு அதிகாரிகளும் இலங்கை செல்வார்கள் என்று அறியப்படுகின்றது.

1964-ம் ஆண்டில் இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் கைச்சாத்தான ஒப்பந்தத்தின்படி 15 வருட காலத்தில் சுமார் 5 லட்சத்து 25 ஆயிரம்பேர் இந்தியாவுக்குத் திரும்புவார்கள். இலங்கையிலிருந்து இந்தியா திரும்புகின்றவர்களுக்கு போதிய வசதிகள் செய்துகொடுக்கப்படவேண்டுமென்று இந்திய போக்குவரத்து அமைச்சு கேட்கப்பட்டிருக்கின்றது.

## டாக்டர் சண்முகரத்தினத்திற்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் இலங்கா வைத்தியக் கல்லூரியின் மாணவர் மன்றம் விரிவுரையாளர் திரு. வ. சிவப்பிரகாசம் தலைமையில் கூடிய போது டாக்டர் சண்முகரத்தினத்தின் மறைவுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக ஒரு நிமிடநேரமௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

ஆயுர்வேத சபையில் போட்டியிடும் டாக்டர் க. வே. சீனிவாசகத்தை இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள சித்த ஆயுர்வேத யுனானி வைத்தியர்கள் அனைவரும் ஆதரித்து அவரை மேற்படி பிரிவுகளின் பிரதிநிதியாக ஆயுர்வேதவைத்தியசபைக்கு அனுப்பவேண்டுமெனக்கோரும் தீர்மானமொன்று கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. இதற்கான பிரேரணையை திரு. அ. அந்தோனி பிரேரித்தார். திரு. ஆ. அரசக்கோன் அனுவதித்தார்.

## தமிழ் ஊழியரின் புதிய சங்கம்

கொழும்பு, வெள்ளி

உள்ளூராட்சிச்சேவை எழுதுவினைஞர் சங்கத்தின் 13-வது வருடாந்தக்கூட்டத்தில் வெளிநடப்புச்செய்த தமிழ் பேசும் அங்கத்தவர்கள் இப்போது ஜனநாயக உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கம் எனப்பெயரிடப்பட்ட புதிய தொழிற்சங்கத்தை நிறுவினர். வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும், புத்தளம் மாவட்டத்திலும் கடமையாற்றும் சகல உள்ளூராட்சி எழுதுவினைஞர்களையும் இச்சங்கம் அங்கத்தவர்களாகக்கொண்டுள்ளது.

புதிய தொழிற்சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பேசுகையில், அதன் தலைவர் திரு. எம். வேலுப்பிள்ளை இத்தகைய சங்கம் ஒன்று தாபிக்கப்பட்டது முறையாகுமென்றும் உள்ளூராட்சி சேவை எழுதுவினைஞர் சங்கம் பாரபட்சமின்றி நடக்கத்தவறிவிட்டதென்றும், அச்சங்கத்தின் சிங்கள அங்கத்தவர்களே தமிழ் பேசும் அங்கத்தவர்கள் வெளியேறக் காரணமாக இருந்தனரென்றும் கூறினார்.

## நாவற்குழி கிராமசபை உபதலைவர் தெரிவு

சாவகச்சேரி, வியாழன்

நாவற்குழி கிராம சபையின் உபதலைவராக திரு. வி. சதானந்தம் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

# பிரதிநிதிகள் சபையில் சிங்களம் மட்டும் இயக்கம்

### திருமதி பண்டாரநாயகாவின் ஆதரவு இல்லை

கொழும்பு, வியாழன்

மக்கள் பிரதிநிதிகள் சபை 'சிங்களம் மட்டும் இயக்கம்' ஒன்றினை ஆரம்பிப்பதற்கு சில எதிர்க்கட்சி அங்கத்தவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து திருமதி பண்டாரநாயகா எதிர்ப்பு தெரிவித்திருக்கின்றார்.

அண்மையில் நடைபெற்ற எதிர்க்கட்சி அங்கத்தவர்கள் கூட்டமொன்றில் இந்த 'சிங்களம் மட்டும்' விஷயம் விவாதிக்கப்பட்டதாகத் தெரிகின்றது. அந்தக்கூட்டத்தில் திருமதி பண்டாரநாயகா பேசியபோது, "நான் ஆங்கிலத்தில் பேசவேண்டிய ஒரு சந்தர்ப்பம் எழுந்தால் அதே சமயம் சிங்களத்தில்பேசும்படி எதிர்க்கட்சி அங்கத்தவர்கள் வெளிநடப்பு செய்வதானால் மிகவும் தர்மசங்கடமான ஒரு நிலைமை ஏற்படும்" [illegible]

இந்த சிங்களம் மட்டும் இயக்கத்தினர் தமக்கு அரசாங்கக்கட்சி அங்கத்தவர்கள் மத்தியிலும் ஆதரவு இருப்பதாகத் தெரிவித்திருந்தபோதிலும், சிங்கள அங்கத்தவர் எவரும் ஆங்கிலத்தில் பேசும்போது அரசாங்கக்கட்சியைச் சேர்ந்த எந்த சிங்கள அங்கத்தவரும் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடவில்லை.

வரவு-செலவுத் திட்ட விவாதத்தின் கடைசி நாளன்று மூன்று எதிர்க்கட்சி சிங்கள அங்கத்தவர்கள் ஆங்கிலத்தில் பேசினார்கள். டாக்டர் என். எம். பெரேரா, திரு. பீலிக்ஸ் டயஸ்பண்டாரநாயகா, ஆகியவர்கள் ஆங்கிலத்தில் பேசினார்கள். திரு. பண்டாரநாயகா முதலில் தம்பேச்சை சிங்களத்தில் ஆரம்பித்து பின்னர் ஆங்கிலத்துக்கு மாற்றிக்கொண்டார்.

அவர் பேசியபோது 'சிங்களம் மட்டும்' இயக்கத்தைச் சேர்ந்த அங்கத்தவர்கள் சபையில் இருக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞான வாசகங்கள்

— சுவாமி கங்காதரானந்தா, திருக்கோணமலை —

சிங்கத்தின் சுறுசுறுப்பும், இரையைக் குறிவைத்திருக்கும் பாம்பின் ஏகாக்கிரசித்தமும், ஆனையின் அமைதியும் பெலமும், மான்பேடையின் நிருபாதிய குணமும், ஆடும் மயிலின் மகிழ்வும், எறும்பின் அயரா உழைப்பும், மாசற்ற பக்தியும் இவை ஆரிடத்தில் பொருந்தி இருக்கின்றதோ அத்தகையவன் இருக்கும் இடம் நரகமாயினும் அது சுவர்க்கமேயாகும்.

மாயை என்ற பொறியில் பேராசை என்ற இரையை வைத்து மனிதவேட்டையாடி உயிரைக் குடிக்கும் இயமனென்ற வேடுவன் வாயிலிருந்து மீளும் வழியறிந்தவனுக்கு இவ்வுலகம் சுவர்க்கமயமானதேயாம்.

ஒருவன் மேன்மைகள் பலவும் பெற்றிருக்கலாம், அறிஞனும் பண்புடையவனுமாயுமிருக்கலாம், எனினும் தன்னை அறியும் சக்தி இழந்தவனாகில், கொப்புத்தேனெடுத்துச் சுவைக்கமுடியாத முடவன்போன்று வாழ்க்கையைச் சரிவரச்சுவைத்துண்ணமாட்டான்.

கொடிய வெப்பத்தால் கொதிக்கும் பாறைக் கல்லானது மழைவிழுந்ததும் கொதிப்பு நீங்கிக் குளிர்மை அடைவதுபோன்று, உள்ளத்தில் ஞான ஒளிவிழுந்ததும் பல பிறவியால் வந்த கர்மவினைகள் நீங்கி எல்லையற்ற அமைதியடைகின்றது.

சூரியனுக்கு எதிர்த்திசையைப் பார்த்திருக்கும் தேவாங்குபோன்று மடர்கள் சத்விஷயங்களுக்கெதிராக முகந்திருப்பிப் பாராமுகமாயிருக்கின்றனர்.

பூத்து நிற்கும் வெண்தாமரையின் பெருமையை தடாகம் எவ்விதம் அறிவதில்லையோ அதேபோன்று பிரபஞ்சமாகிய தடாகத்தில் பூத்துமணங்கமழும் இறையொழியை மூடஜனங்கள் அறிவதில்லை. எனினும் அனித்யமான இப்பிரபஞ்சமும் அருளொளிப் பிரகாசத்தினுல் இன்பமயமானதேயாகும்.

விதம்விதமான சங்கீதத்திற்கு சுருதி ஆதாரமாயிருப்பது போன்று பலதரப்பட்ட ஆத்ம சாதனங்கட்கு பக்தி ஆதாரமாயிருக்கும்.

மனித வாழ்வு பாயாசம் போன்றது. அதில் தானியம், பால், ஏலம், கராம்பு முதலிய பலவகைப் பொருட்கள் சேர்க்கப்பட்டாலும் தித்திப்புத்தான் அதன் முக்கிய சுவை. தித்திப்புச் சுவைக்கு மாற்றுக் கூட்டுவதற்கே ஏனைய பொருட்கள் சேர்க்கப்படுகின்றன. அதேபோன்று நமது வாழ்வில் பலதும் சிந்தித்துச்செய்து பலதையும்அடைகிறோம். எனினும் ஈஸ்வர பக்தியே வாழ்வின் முக்கிய சுவையாயிருக்காவிட்டால் மற்றவை எல்லாம் பிரயோசனமற்றதும், சுவையற்றதுமாகப்படுகின்றன.

தேனடையைப்பிழிந்தால்தான் தேன்கிடைக்கும் அதேபோன்று இதயமாகிய அடையைத் தியானத்தாற் பிழிந்து அருளமுதம் என்ற தேனைக் குடிக்கத் தெரியாதவனுக்கு பித்தரோகியின் நாக்குப் போன்று வாழ்வு ருசியற்றதாயிருக்கும்.

இவ்வுலகில் ஒவ்வொன்றும் படிப்படியாக வளர்ந்தும் போய்க்கொண்டும் இருக்கின்றன. போக்கும் வரவுமில்லாத ஒருவஸ்து நமக்குள்ளே இருக்கின்றதென்று சரிவர உணருவதே ஞானம்.

இதை எவன் அகத்தெளிவால் பெறுகின்றானே அவனுக்குத் துக்கமும் சோகமுமில்லை. மயக்கம் அவனைச் சஞ்சலப்படுத்துவதில்லை. அவனிடமிருந்து [illegible] த்தவகும் பேரின்பமும் சமுத்திரசலம் போன்று எக்காலத்திலும் வற்றுவதில்லை.

# முடியாத காலக்ஷேபம்

மதுரை சேஷ பாகவதர் என்பவர் ஒவ்வொரு வருடமும் தமது வீட்டில் கோலோஷ்டமி கொண்டாடுவார் அந்த உற்சவத்துக்கு பிரபல சங்கீதவித்வான்கள் எல்லோரும் வந்து கச்சேரிசெய்து சிறப்பிப்பார்கள்.

ஒருசமயம் காயகசிகாமணி முத்தையா பாகவதரும் அவருடைய சிஷ்யர் ஒருவரும் அந்த உற்சவத்துக்கு வந்திருந்தார்கள். சிஷ்யப்பிள்ளைக்கு தானும் ஒருநாள் குருவைப்போல கதாகாலக்ஷேபம் செய்ய வேண்டுமென்று கொள்ளை ஆசை குருவுக்கு தெரியாமல் தமக்கும் ஒருநாள் இடம்தரும்படி விழா நிர்வாகிகளுடன் ஒழுங்கு செய்துகொண்டார். முத்தையா பாகவதர் 'இன்றைக்கு யாரடா கச்சேரி?' என்று கேட்டபோது, யாரோ ஒரு கத்துக்குட்டி பாடுகிறான். நீங்கள் வீணாக சிரமப்பட்டு வரவேண்டாம்' என்றும் சொல்லிவிட்டார். குருவுக்கு அன்று பிற்பகல் எப்படியோ விஷயம் காதுக்கு எட்டிவிட்டது. சிஷ்யனுக்குத் தெரியாமல் எப்படியாவது சபையில் உட்கார்ந்துவிடுவதென்று நிச்சயித்துவிட்டார்.

அன்றிரவு குருவுக்கு தெரியாமல் அவருடைய ஜரிகை வேஷ்டி, சால்வை, சப்ளாக்கட்டை எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு சிஷ்யப்பிள்ளை சபையில் காலக்ஷேபம்செய்ய ஆரம்பித்துவிட்டார்.

இந்த சமயத்தில் முத்தையா பாகவதர் எவ்வளவோ இரகசியமாக வந்துஉட்கார்ந்தபோதிலும் அவருடைய வருகை தெரிந்துபோய்விட்டது. சபையில் ஆரவாரம் உண்டாகியது. சிஷ்யருக்கும் விஷயம்தெரிந்துவிட்டது. எப்படியோ சமாளித்துக்கொண்டு கதையை ஆரம்பித்தார்.

'ஆமௌ கீர்த்தனாரம்பத்தில் பெரியவாள் பிரதம பதத்தாலே என்ன தெரிவிக்கிறார் என்றால்.....!

இதற்குமேல் சிஷ்யருக்கு ஒன்றும் ஓடவில்லை. கிடுகிடுவென்று நடுங்க ஆரம்பித்துவிட்டார். வாய் பேசவே மறந்து [illegible] குரு சபையில் இருக்கிறார்

என்ற நினைவு அவரை ஸ்தம்பித்துவிட்டது.

இதைக் கண்ட முத்தையா பாகவதர் உடனே எழுந்து நின்று, 'பகவான் தான் குரு. அவரை அறியாமல் எதையும் செய்யப்படாது' என்று தெரிவிக்கிறார் என்று சொன்னார். சபையோர் உடனே கைதட்டி சிரித்து ஆரவாரித்தனர். பின்பு முத்தையா பாகவதரே அந்த காலக்ஷேபத்தை நடத்தி முடித்தார்.

ஃ ஃ ஃ

இன்னொரிடத்தில் முத்தையா பாகவதர் கதை செய்து முடிந்த பின்னர் வீட்டுக்காரர் எல்லோருக்கும் சுண்டல், பிரசாதம் [illegible]

(7-ம் பக்கம் பார்க்க)

# பஞ்சாமிர்தம்

தயாரிப்பு:- வி. என். பி.

சொர்ணரின் வர்ணனைகள்

## மனோ பலத்தால் காய்ச்சலை குறைக்கும் வித்தை

'கலையரசு' க. சொர்ணலிங்கம் இளம்வயதில் தமது உத்தியோகம் நிமித்தமாக அக்காலத்தில் மலேரியா குடிகொண்டிருந்த பட்டினங்கள், கிராமங்கள் எல்லாவற்றிற்கும் போகநேர்ந்தது. தன் பலனாக அவருக்கும் மலேரியா நோய் வந்துவிட்டது. 104, 105 டிகிரியில் காய்ச்சல் காய்ந்து கொண்டிருந்தாலும் இரவு நாடகம் இருந்தால கட்டாயம் நடித்தே தீருவார். ராமாயணத்தில் சொர்ணருடைய வேடம் கூனி. உடம்பை டாஞப்பட வளைத்துக்கொண்டு மந்திரைக்காக கைகேயியுடன்வாதாட வேண்டும். கடலை பொரியும் அளவுக்குத் தேகத்தில்காய்ச்சல் கொதி தெறித்தாலும் அவர் அந்த கூனல் நடிப்பை விடமாட்டார்.

அவருக்கு வேண்டிய உறவினர்கள் காய்ச்சல் காயும் நேரத்தில்நடிக்கவேண்டாம் என்று அவரைத் தடுப்பார்கள். ஆனால் அவர் கேட்டால் தானே? அவர்களுடைய நெருக்குதல் தாங்க முடியாவிட்டால் சொர்ணர் ஒரு தந்திரத்தைபிரயோகம் செய்வார்.

உறவினர்: (உஷ்ணமானியை சொர்ணருடைய வாயில் வைத்துப்பார்த்துவிட்டு) இன்றைக்கு நீங்கள் நாடகத்துக்குப் போகப்படாது. காய்ச்சல் 103 இலே காயுது.

சொர்ணர்: அதைப்பற்றிப் பரவாயில்லை. நான் மனோ பலத்தாலே காய்ச்சலைக் குறைப்பேன்.

உறவினர்: (சிரித்து) அதெப்படி முடியும்? மனோ பலத்தாலே காய்ச்சலை எப்படி தணிக்கலாம். சும்மா பகிடி பண்ணுறதையுங்கோ!

சொர்ணர்: பகிடியல்ல உண்மை. எனக்கு அந்த வல்லமை இருக்கிறது வேண்டுமானால் பாருங்கோ. இப்ப 103 இல் தானே காய்ச்சல்காய்கிறது. சரி வெளியில் போய்விட்டு ஐந்து நிமிடம்கழித்து வந்து பாருங்கள்.

உறவினர் வெளியே போதல். சொர்ணர் பக்கத்திலுள்ள சுடுதண்ணீர் போத்தலிலிருந்து சிறிது வெந்நீரை ஒரு கிளாசில் ஊற்றி கொஞ்சம் கொஞ்சமாக அருந்தினார். ஐந்துநிமிடம் கழித்து உறவினர் உள்ளே வருதல். சொர்ணரின் வாய்க்குள் வெந்நீரின் சூடு இருக்கிறது.

சொர்ணர்: தேர்மோமீட்டரை இப்பொழுது வைத்துப்பாருங்கள்.

உறவினர்: (உஷ்ணமானியை வைத்துப் பார்த்துவிட்டு) எடே ஓமப்பா! இப்ப காய்ச்சல் 100 இலே தான் நிற்கிறது.

சொர்ணர்: ஆ, பார்த்தீர்களா! இன்னும் கொஞ்சம் ஊற்றி மனோபலத்தை உபயோகித்தேன் என்றால்காய்ச்சல் துப்பரவாகநின்றுவிடும். இதெல்லாம் என்ன பிரமாதம்!

உறவினர் ஆச்சரியத்துடன் மௌனமாதல்.

# வழக்கம் வந்த விதம்

வழக்கங்கள் எப்படி உண்டாகின என்று விளக்கம் தரும்படி நேயர்களை கேட்டிருந்தோம் பல அன்பர்கள் எழுதியிருக்கிறார்கள். மூடநம்பிக்கைகள் என்ற வழக்கங்கள் பற்றி எழுதியிருக்கிறார்களேயன்றி விளக்கம் தருவார் மிகச் சிலர் தாம்.

தென்புலோலியூர் பொ. கோபாலகிருஷ்ணன் அவர்கள் சில பழக்கவழக்கங்களையும் அவற்றின் காரணங்களையும் தந்துள்ளார். அவற்றை நன்றியுடன்வெளியிடுகிறேன். மற்ற வாசக நேயர்களும் அவரை பின்பற்றுவார்கள் என்று நம்புகிறேன்.

ஃ வீட்டில்ஏதாவது அந்தியேட்டி, திவசம், அல்லது படையல் போன்றவை நிகழ்ந்தால் வீட்டிலுள்ளவர்கள், உண்பதற்குமுன் ஒரு பிடி அன்னத்தையும், கறி முதலியதற்றையும், காகத்துக்கு எறிவார்கள். அத்துடன் செம்பிலிருந்து தண்ணீரையும் தெளிப்பார்கள். இதற்கு இரண்டு காரணம் கூறுவார்கள். ஒன்று, சாப்பாட்டில் ஏதாவது நச்சுத்தன்மை கலந்திருந்தால் அதை உண்ணும் காகம் இறந்துவிடும், அல்லது உண்ணமல் விட்டுவிடும். இதை மனதில் வைத்தும் இப்பழக்கம் உண்டாகியிருக்கலாம்.

அல்லது, ஒரு பிடி அன்னத்தை நாம் கூரையில் எறிந்தவுடன் காகம் ''கா'' ''கா'' என்று தன் சந்ததியினரை அழைத்து பகிர்ந்துண்ணும் மனப்பான்மையை, மனிதன் உணவுண்ணப்போகும்போது உணர்ந்துகொள்ளட்டும் என்பதற்காக ஏற்பட்டிருக்கலாம்.

இறந்தவர்கள் காக உருவில் வந்து இருப்பார்கள். அவர்களுக்காகத்தான் இந்த உணவு எறியப்படுகிறது என்றுகூறுவாருமுளர்.

பெண்கள் வட்டவடிவமான அகலமான பொட்டு நெற்றியில் இடுகிறார்கள். காரணமென்ன தெரியுமா? ஹிப்னுடிச, மெஸ்மரிசமுறை தெரிந்தவர்கள், ஒரு மனிதனை, உற்றுநோக்குவதன்

(7-ம் பக்கம் பார்க்க)

# பனையே நீ வாழி

மாவார் பலாவார் வாழையார்
வாழா ரிங்கே நீயென்னின்
தீவார் அகமெலாம் கனிநல்கத்
தெவிட்டா துண்டு பூரித்தோம்
பூவார் சோலை நின்னீட்டம்
புதுமணம் நடக்கும் அந்நிழலில்
ஆவார் தமக்கு நின்னேலை
ஆக்க மளிக்க நீவாழி.

இளைய இளைய நுங்கமுதம்
இளையார் தங்கள் கண்கவர
வளைவ வளைய வருமவர்கள்
வட்டைப் பார்த்து வாயூறி
தளை நாரும் இன்றியொரு
தாவில் ஏறி அரிந்துண்ணக்
களையை விசிறி ஓலையொடு
கணத்தில் தீர்ப்பாய் நீவாழி.

இடியல் செய்து மாவாக்கி
இன்றி யமையாக் கூழாக்க
ஒடியல் தந்தாய் பனாட்டும்
உடனாய்த் தந்தாய் பசிப்பிணியைக்
கடியல் செய்தாய் கறிசேர்க்கக்
கடலைக் காட்டி, இம்மட்டோ!
படையல் செய்தாய் நாகரிகம்
பனையே! என்றும் நீவாழி.

பாளை சிந்தும் நின் தேறல்
பலவின் கூட்டாய்க் குடிநீராய்
வேலை அறிந்து வருவாரின்
வேட்கை தணித்துத் தலைக்கேறத்
தாளைத் தூக்கி அவராடத்
தலையை அடைத்து மிகஊக்கி
நாளைக் காண்போம் மிகுதியென
நக்கு நிற்பாய் நீவாழி.

நுங்கும் பழமும் ஓலையுடன்
நுரைசிந் தும்கள்ளும் பதநீரும்
கங்கும் கிழங்கும் பனாட்டும்
கருக்கு மட்டை ஈர்க்கும்
சங்கின் குருத்தும் தும்பும்
தகனும் இவையும் பி வும்
இங்குன் கொடைகள் நாமுய்ய
இயல்பின் வளர்ந்தாய் நீவாழி.

— "தீவான்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடலில் மிதந்துவந்த பிரேதம்

சங்கானை, வியாழன்
சென்றசெவ்வாய்க்கிழமை பொன்னாலைக்கடலில் ஒரு பிரேதம் மிதந்துவருவதைக் கண்ட கதிரேசு வீரசிங்கம் என்ற மீனவர் செய்தியைச் சங்கானைப் பொலிசாருக்குத் தெரிவித்தார்.

சங்கானைப் பொலிசார் ஸ்தலத்திற்கு விரைந்து சென்று சடலத்தைக்கரை சேர்த்தனர். சுமார் 45 வயது மதிப்பிடத்தக்க ஓர் ஆடவரின் அச்சடலத்தை ஒருவராலும் அடையாளம் கண்டுகொள்ளமுடியவில்லை.

சடலத்தைக் கோரி ஒருவரும் முன்வராததையால் அரசாங்கத்தினரால் சடலம் அடக்கம் செய்யப்பட்டது. காங்கேசன்துறை வைத்திய அதிகாரி பிரேதபரிசோதனை நடத்தினார். அவர் தீர்ப்பை ஒத்திவைத்துள்ளார்.

## எதிரிகளுக்கு றிமாண்ட்

சாவகச்சேரி, வியா.
சரசாலையைச்சேர்ந்தகந்தன் சின்னத்தம்பி என்பவரைக் கொலைசெய்ததாகக் கைது செய்யப்பட்ட வல்லி கந்தன், சின்னக்குட்டி வேலன் ஆகிய இருவரும் சாவகச்சேரிப் பொலிசாரால் மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டபோது, மாஜிஸ்திரேட் எதிரிகள் இருவரையும் றிமாண்டில் வைக்குப்படி உத்தரவிட்டு விசாரணையை இம்மாதம் 20-ம் திகதிவரைஒத்திவைத்தார்.

ஈழநாடு

## சூருவளி நிவாரண மாத உதவித் திட்டம்

கரவெட்டியைச் சேர்ந்த ஓர் அன்பர் 'ஈழநாடு' சூருவழி நிவாரண மாத உதவித் திட்டத்துக்கான தமது ஆவணிமாதப் பணத்தை (ரூ. 25) அனுப்பிவைத்துள்ளார்.

## 'சிறுபராயத்திலேயே தெய்வ பக்தி ஊட்டவேண்டும்'

உடுப்பிட்டி, புதன்
'பிள்ளைகளிடையே அவர்களின் சிறுபராயத்திலேயே தெய்வபக்தியை ஊட்ட வேண்டும். கோவில்திருவிழாக்கள்ல் செய்யப்படும் அனுவசியச் செலவுகளைத் தவிர்த்து அப்பணத்தை நல்ல முயற்சிகளில்செலவிட வேண்டும்.'

இவ்வாறு கரணவாய் தெற்கு மூத்தவிநாயகர் சனசமூக நிலையத்தின் 28-வது ஆண்டுவிழாவில்பேசிய பலாலி அரசினர் ஆசிரிய பயிற்சிக்கலாசாலை தமிழ் விரிவுரையாளர் திரு. பொன் கிருஷ்ணபிள்ளை கூறினார். வித்துவான் க. கார்த்திகேசு தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு இ. மகாதேவன் பேசுகையில் கூறியதாவது.

'உள்ளத்திலே ஏற்படும் கோணங்களே எம்வாழ்க்கையிலும் ஏற்படுகிறது. எனவே எம்மனதுக்கு எழுச்சி தரக் கூடிய புதிய கருத்துக்களைக் கொள்ள வேண்டும். கலை பலவடிவில் தோன்றுவதால் தான் வளர்ச்சியடையும். கலைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.

யாழ்ப்பாணம் இந்துமகளிர் கல்லூரி ஆசிரியை செல்வி புஷ்பா செல்வநாயகம் பேசுகையில், தமிழ்ப் பெண்கள் சமூகப்பணிகளில் உற்சாகத்துடன் ஈடுபட வேண்டும்என்றும் பெண்கள் தமது திறமையை சமூகத்துக்காப்பயன்படுத்த வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

திரு. கே. பி. ஹரன் பேசுகையில், நம்மைத்திருத்திக்கொண்டால், வீடும் திருந்துமென்றும் நம்மைத் திருத்திக்கொள்ள ஒரேவழி இறைவன் திருவருள் மூலம் தான் என்றும் கோவில்வழிபாடு அவசியமென்றும் குறிப்பிட்டார்.

## நீதிமன்ற எல்லைக்குள் சண்டைபிடித்தனராம்

சாவகச்சேரி, வியா.
மாவட்ட நீதிமன்ற லிகிதர் திரு. பி. வேலாயுதம் என்பவரும் புறக்டர் திரு. கே. பாலகிருஷ்ணன் என்பவரும் நீதிமன்றவளவுக்குள் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டதாக வழக்கொன்றைச் சாவகச்சேரிப் பொலிசார் மாஜிஸ்திரேட் முன்னிலையில் தாக்கல் செய்தனர் மாஜிஸ்திரேட் வழக்கை அடுத்த மாதம் 19-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## இந்திய ஹைகமிஷனர் உருத்திர புரத்துக்கு விஜயம்

யாழ்ப்பாணம், வெள்ளி
இலங்கை இந்தியத்தூதுவர் டாக்டர் பீம்சென் சச்சார் வரும் ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணிக்கு உருத்திரபுரம் காந்தி நிலையத்துக்கு விஜயம்செய்யவிருக்கிறார்.

அன்று அவர் சர்வோதய நூலகத்தை திறந்து வைப்பார். அம்பர் இராட்டை பயிற்சி நிலையத்துக்கான அடிக்கல்லையும் அவர்நாட்டிவைப்பார்.

## வழக்கம். . . .

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

மூலம் ''நித்திரை நிலையை'' அடையச் செய்துவிடலாம். இமை இரண்டிற்கும் இடையிலுள்ள வெளியான பகுதியில் பொட்டிட்டால், ஹிப்னடிச முறைப்படி ஒன்றும் செய்ய இயலாது. அதனால் தான் இமை இரண்டிற்கு மிடையில் பொட்டிடும் முறை வந்தது. ஆனால் தற்காலத்துப் பெண்களோ, தலைமயிர் ஆரம்பமாகு மிடத்தில் பொட்டு வைக்கிறார் கள்.

வீட்டில் விளக்கு ஏற்றிய பின், வீடு கூட்டக்கூடாது. அப்படிக் கூட்டினாலும், குப்பையை அள்ளி வெளியே வீசக்கூடா தென்பது வழக்கம். இதற்குக் காரணம், பொழுது சாய்ந்தபின் கூட்டும் குப்பைக்குள் ஏதாவது காசு, ஆபரணங்கள் தவறுதலாக [illegible]விழுந்திருக்கலாம். அந்தக் குப்பையைப் பகலில் எடுத்து எறிந்தால் ஏதாவது பொருட்கள் கிடந்தாலும் தெரியும் என்ற காரணத்தால்தான் இப்பழக்கம் ஏற்பட்டிருக்க வேண்டும்.

## முடியாத. . . .

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் இலைகளை எடுத்து அகற்றாமல் அப்படியே விட்டு விட்டுப்போய் விட்டார்கள்.

வீட்டுக்காரரோடு பேசிக் கொண்டு நின்றவர்களும் பாகவதரிடம் தங்கள் மகிழ்ச்சியை தெரிவிக்க நின்றவர்களும் உட்காருவதற்கு இடமில்லாமல் போய்விட்டது. அவர்களும் எச்சில் இலைகளை எடுக்க கூச்சப்பட்டு இருந்துவிட்டார்கள்.

வீட்டுக்காரருடைய பேரப்பையன் — கண்ணன் என்ற பெயருடையவன். இந்தச் சங்கடத்தைப் பார்த்துவிட்டுத்தானே அந்த இலைகள் எல்லாவற்றையும் எடுத்து அகற்றி இடத்தை சுத்தப்படுத்தினான்.

பாகவதர் உடனே, 'பார்த்தீர்களா, நானும் கதையில் இந்த உண்மையைத்தான் சொன்னேன். அதாவது கண்ணன் 'எச்சிக்கலையும் எடுப்பான்' என்பது என்று இரு பொருள்படக்கூறினார். கண்ணபரமாத்மா எந்தச் சிக்கலையும் (எச்சிக்கலையும்) அவிழ்ப்பான். இந்தக் கண்ணன் [illegible]

## மாவட்ட சபை நகல் மசோதா

கொழும்பு, வெள்ளி
உத்தேசிக்கப்பட்டுள்ள மாவட்டசபைகள் பற்றிய மந்திரிசபை அறிக்கை ஒன்றை உள்ளூராட்சிமந்திரி திரு. எம். திருச்செல்வம் விரைவில் சமர்ப்பிப்பார்.

மந்திரிசபையின் அங்கீகாரம்பெற்றதும், பாராளுமன்றத்தின் நடப்புத் தொடர் கூட்டத்தில் நகல் மசோதா சமர்ப்பிக்கப்படுமெனத் தெரிகிறது.

இதற்கிடையில் ஐந்து அங்கத்தவர்களைக்கொண்ட தமிழரசுக் கட்சித் தூதுகோஷ்டி, தாம் தயாரித்துள்ள உத்தேச மாவட்ட சபை நகல்மசோதாவைப் பற்றி பிரதமரைச்சந்தித்துப் பேசுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## இலங்கை வானொலியும் இந்திய படப்பாட்டுகளும்

கொழும்பு, வெள்ளி
'சர்வதேச பதிவுரிமை சாசனத்தில் இலங்கை கையொப்பமிடாத நாடாகையால், இலங்கைவானொலி மூலம் ஒலிபரப்பப்படும் இந்திய படப்பாட்டுக்களுக்குப்பணம் செலுத்த இலங்கை சட்டத்தினால் கட்டுப்படுத்தப்படவில்லை' என்றுஇலங்கை வானொலியின் பம்பாய் பிரதிநிதி திரு. டால்கோவிந்த் சிரிவஸ்தாவ் கூறியுள்ளார்.

இப்பாட்டுக்கள் மீது உரிமையும் சொந்தமும் கொண்டாடுவதற்கு இந்தியப் படத்தயாரிப்பாளர்களுக்குத் தார்மீக உரிமை இருக்கலாமே தவிர, சட்ட உரிமை கிடையாதென்று திரு. கோவிந்த் சொன்னார்.

இலங்கை வானொலியின் இந்திய படப்பாட்டுக்கள் ஒலிபரப்பப்படுவதையிட்டு தமக்கு, அப்படங்களின் தயாரிப்பாளர் என்ற முறையில் கணிசமான அளவு பணம் செலுத்த வேண்டுமென்று இந்திய படத்தயாரிப்பாளர் சங்கம் கேட்டுக்கொண்டதும், இலங்கை வானொலி அதை மறுத்ததும் தெரிந்ததே.

## மின்சார விநியோகம்: மந்திரி ஆரம்பித்துவைப்பார்

யாழ்ப்பாணம், வெள்ளி
சங்கானைப் பட்டினசபை எல்லைக்குட்பட்ட இடங்களுக்கான மின்சார விநியோக இரண்டாவது கட்டத்தை உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வம் இன்று மாலை 6 மணியளவில் ஆரம்பித்து வைப்பார். இதன்பின்னர் பட்டினசபை தலைவர் திரு. க. திருச்சிற்றம்பலம் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் அராலி வைரவர் கோவில்முன்றலில் நடைபெறும்.

## சதிவழக்கு தற்கொலை மறுவிசாரணை

கொழும்பு, வெள்ளி
சதிவழக்கில் தற்கொலை புரிந்த எல். வி. பொடி அப்புஹாமியின் மரணச் சம்பந்தமான மறுவிசாரணை ஆகஸ்ட் 22-ந் திகதி கோட்டை கூட்டு நீதவான் மன்றத்தில் விசாரிக்கப் படும்.

இறந்தவரின் சகோதரரான எல். வி. ஸ்டீபென் என்பவரின் மறுவிசாரணைக்கான மனு சென்ற 12-ந் திகதி கோட்டை நீதவான் திரு. வின்சென்ட் சுவர்ணபதியினால் அனுமதிக்கப் பட்டது.


ஆங்கில
ஓவல்
முகம் பார்க்கும்
கண்ணாடி
மிகக்குறைந்த விலையில்
பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு கொள்க:
த பர்மா ரீக் ரேடிங்
கம்பனி லிமிட்.,
62, புளூமெண்டால் ரோட்,
கொழும்பு—13.
போன்: 2233
2284



வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன பஞ்சரத திருப்பணி நிதி



நன்கொடையை வழங்கினீர்களா வண்ணை
வைத்தீஸ்வரன் பஞ்சரதத் திருப்பணிக்கு?
இன்றேல் இன்றே நன்கொடை வழங்கி
ஊக்குவித்தல் அடியார் கடமையாகும்.

தனாதிகாரி,
தேர்த் திருப்பணிச்சபை,
தேவஸ்தான காரியாலயம்,
வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம்,
வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம்


## இலங்கை கம்பன் கழகத்தின் நாடகப் பிரதிப் போட்டி

### நிபந்தனைகள்

1. இலங்கைக் கம்பன் கழகத்தினர் தாம் செப்டம்பரில் நடாத்தவிருக்கும் கம்பன் விழாவையொட்டி நடாத்தும் நாடகப் போட்டியில் கலந்து கொள்ளும் நாடகங்களின் பிரதிகளே போட்டிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

2. அனுப்பப்படும் நாடகங்களில் சிறந்த மூன்றிற்கு ஈழநாடு, டாக்டர் சண்முகரத்தினம் அவர்களின் ஞாபகார்த்தமாக மூன்று பரிசில்கள் வழங்கும்.

முதற்பரிசு — 150 ரூபா
இரண்டாவது பரிசு— 100 ரூபா
மூன்றாவது பரிசு — 75 ரூபா

3. தேர்ந்தெடுக்கப்படும் நாடகங்களை "ஈழநாடு" தனது வாரமலரில் தொடர்ந்து வெளியிடும்.

4. நாடகப் பிரதிகளை அனுப்பவேண்டிய கடைசித் திகதி 30-8-66. பிரதிகள் அனுப்பப்படவேண்டிய முகவரி:

ஆசிரியர், ஈழநாடு வாரமலர்,
ஈழநாடு காரியாலயம்,
யாழ்ப்பாணம்.

5. நாடக சம்பந்தமாக ஈழநாடு காரியாலயத்தோடு எவ்வித நேரடித் தொடர்பும் கொள்ளலாகாது.

6. நாடகப் பிரதிப் போட்டி சம்பந்தமான இறுதி முடிவு, ஈழநாடு வாரமலர் ஆசிரியர்க்கே உரியது.

7. தகுதிவாய்ந்த மூவரைக்கொண்ட மதிப்பீட்டாளர் குழு சிறந்த நாடகங்களைத் தெரிந்தெடுக்கும்.

8. நாடகங்களை மேடையேற்றுவதற்குக் குறித்த நிபந்தனைகள், நாடகப்பிரதிப் போட்டிகளின் தெரிவுக்கும் பொருந்தும்.

9. நாடகங்கள் பதிவு அஞ்சலில் அனுப்பப்படுவது நன்று. அவை தவறினிடின் அதற்கான பொறுப்பை ஈழநாடு காரியாலயம் ஏற்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவ அதிகாரிகள் வீடுகளை காட்டினேன்

## அமரதுங்காவுடன் காரில் சுனில் ஹேவகேயும் வந்தார்

### சதிவழக்கில் கோர்ப்பரல் சாட்சியம்

### நீதிமன்றத்தில் சந்திரசோமா மன்னிப்புக் கோரினர்

சதிவழக்கு விசாரணை நண்பகல் இடைவேளைக்குப் பின் பிரதம மாஜிஸ்டிரேட் திரு. பி. ஜி. எஸ் டேவிட் முன்னிலையில் மீண்டும் ஆரம்பமானபோது பிராஸிக்கியூஷன் தரப்பு முதல் சாட்சியான துறைமுகக்கமிஷனர் திரு. எம். சந்திரசோமா எதிர்தரப்பு வழக்கறிஞர்களால் தொடர்ந்து குறுக்கு விசாரணைசெய்யப்பட்டார்.

**வழக்கறிஞர்கள் குதித்தெழுந்தனர்**

வழக்கறிஞர் ஒருவரின் கேள்விக்கு திரு. சந்திரசோமா அளித்த பதிலைக் கேட்டு, எதிர்தரப்பு வழக்கறிஞர்கள் அத்தனைபேரும் குதித்தெழுந்து நீதிபதியிடம் ஆட்சேபம் தெரிவித்துடன் சாட்சி மன்னிப்பு கோரவேண்டுமெனக் கேட்டுக்கொண்டனர்.

''உமக்குப் பௌத்தம் நன்றாக தெரியுமா?'' என்று வழக்கறிஞர் ஒருவர் கேட்ட கேள்விக்குச் சாட்சி சந்திரசோமா பதிலளிக்கையில், ''நான் பாளி மொழியும் மற்றும் பௌத்த நூல்களையும் படித்திருக்கிறேன். ஞானசீகதேரோவைத் தவிர இந்த நீதிமன்றத்திலுள்ளோர் எவரையும்விட எனக்குப் பௌத்தத்தைப் பற்றி அதிகம் தெரியும்'' என்றார்.

இந்தப் பதிலைக் கேட்டதும் எதிர்தரப்பு வழக்கறிஞர் ஆறுபேர்கள் குதித்தெழுந்து இந்தப் பதில் நீதிமன்றத்தை அவமரியாதை செய்வதாகுமென்று கூறி ஆட்சேபம் தெரிவித்தனர்.

நீதிபதி உத்தரவிட்டால் தாம் மன்னிப்புக் கோருவதாகச் சாட்சி தெரிவித்தார்.

சாட்சி மன்னிப்புக் கோரியதாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளதெனப் பின்னர் நீதிபதி தெரிவித்தார்.

''நீர் ஒரு நேர்மையான பௌத்தர் தானா?'' என்று பின்னர் மற்றொரு வழக்கறிஞர் கேட்ட கேள்விக்குச் சாட்சி பதிலளிக்கையில் ''நான் நேர்மையான பௌத்தனா இல்லையா என்பதை மற்றவர்களே தீர்மானித்துக்கொள்ள விட்டுவிடுகிறேன்'' என்று கூறினார்.

**நானே முதலில் வாபஸ் பெறுவேன்**

''எதிரிகளுக்கு எதிராகச் சாட்சியம் எதுவும் இல்லையென நிரூபிக்கப்பட்டால் அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நானே முதலில் வாபஸ்பெறுவேன் என்பதை நீதிபதிக்கும், வழக்கறிஞர்களுக்கும் உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று அட்டர்னி ஜெனரல் திரு. ஏ. ஸி. எம் அமீர் இன்று நீதிமன்றத்தில் தெரிவித்தார். திரு. அமீர் இந்த வழக்கில் சாட்சிகளை ஆஜர்செய்து விசாரணையை ஆரம்பித்து நடத்துவதை எதிர்தரப்பு வழக்கறிஞர் ஒருவர் ஆட்சேபித்தபோதே திரு. அமீர் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. அமீர் அட்டர்னி ஜெனரலாக நியமிக்கப்பட்டது அரசாங்கத்தினால் செய்யப்பட்ட அரசியல் நியமனம் என்றும் மாஜிஸ்டிரேட் நீதிமன்றம் ஒன்றில் அட்டர்ணி ஜெனரல் நேரில் ஆஜராகி வழக்கு விசாரணையை நடத்திவைப்பது இதுதான் முதல்தடவையென்றும் விசாரணை முடிந்து உறுதிப்படுத்தப்பட்ட பதிவுப்பிரதிகள் அட்டர்னி ஜெனரலின் பரிசீலனைக்கு அனுப்பப்படும்போது அதன் இறுதி முடிவைச் செய்வதில் அட்டர்ணி ஜெனரல் பக்கச்சார்பு எடுக்கக்கூடுமென்றும் ஒரு வழக்கறிஞர் குறிப்பிட்டார். சாட்சியங்கள் இல்லையெனில் குற்றச்சாட்டுக்களை வாபஸ்பெறத் தயங்கமாட்டேன்'' என திரு. அமீர் கூறியதும் வழக்கறிஞர் சாட்சியைத் தொடர்ந்து குறுக்குவிசாரணைசெய்தார்.

சந்திரசோமாவை எதிர்தரப்பு வழக்கறிஞர்கள் குறுக்குவிசாரணை செய்த பின் அட்டர்ணி ஜெனரல் சாட்சியை மீண்டும் விசாரணைசெய்தார்.

**கோர்ப்பரல் சாட்சியம்**

அடுத்து இராணுவத்தைச் சேர்ந்த கோர்ப்பரல் துவான்சாலி நாலவன்சா என்பவர் சாட்சியமளித்தார். 30 வயதான துவான்சாலி இலங்கை இராணுவத்தில் கோர்ப்பரலாகக் கடமையாற்றுவதாகத் தெரிவித்தார். அவர் தமது சாட்சியத்தில் மேலும் கூறியதாவது:

மேஜர் ஏ. டி. பி. பெரேராவிற்கு நான் சாரதியாக இருந்திருக்கிறேன். ஆருவது எதிரி கோர்ப்பரல் அமரதுங்கா பனாகொட இராணுவ முகாமில் என்னுடன் ஒன்றாக வேலைசெய்தவர்.

**வீடுகளைக் காட்டச் சொன்னர்**

நிலையக் கமாண்டரை இராணுவ வேலைத்தலத்துக்குக் கூட்டிச்செல்லும் ஸ்டேஷன் வாகனைக் கொண்டுவரும்படி கோர்ப்பரல் அமரதுங்கா பெப்ரவரி 15ந் தேதி என்னிடம் கூறினர். லெப்டுனன்ட் குவாட்டமாஸ்டர்விதாரனேயும் என்னுடன் வந்தார். அந்த வாகனத்தைக் கொண்டுவந்து அங்கு விடுமாறு எனக்குச் சொன்னர்கள். விதாரணே, எலாரிஸ் ஆகியோரும் நானும் இராணுவதலைமைக் காரியாலயத்துக்கு வந்தோம். அங்கு சிவில் உடையிலிருந்த கோர்ப்பரல் அமரதுங்காவைச் சந்தித்தேன். ஆயுதச்சாலைக்கு 20 யார் தூரத்தில் அமரதுங்கா நின்றார்.

**பிரிகேடியர் வீட்டுக்குப் போக**

தான், பிரிகேடியர் ஹெய்ன் வீட்டுக்கும், மேஜர் ஜயரத்தின வீட்டுக்கும் போகவேண்டி இருப்பதாகவும், தனக்கு அவர்களின் வீட்டைக் காட்டும்படியும் அமரதுங்கா சொன்னர். ஏனென்று நான் கேட்டதற்கு அதுபற்றிப் பின்னர் கூறுவதாகத் தெரிவித்தார். எனக்கு அவசரவேலை இருந்ததால் நான் ஒய்வாகவிருக்கும்போது வீடுகளைக் காட்டுவதாகச் சொல்லி என்னை எனது வீட்டில் சந்திக்கும்படி அவரிடம் சொன்னேன். என்னை மஹரகமைக்கு வரும்படி அவர் சொன்னர்.

**கொழும்புக்கு காரில் வந்தோம்**

அடுத்த நாள் அமரதுங்காவைச் சந்தித்து அவர் செலுத்திவந்த காரில் கொழும்புக்கு வந்தோம். மேஜர் லப்ரோய் வீட்டை அமரதுங்காவுக்கும் காட்டினேன். மேஜர் மெக்கன்ஸயர், மேஜர் அமிர்தலிங்கம், மேஜர் ஜயசிங்கா, மேஜர் ஷொக்மன், காப்டன் ஸ்டேவ்ஸ், காப்டன் பொன்சேகா, பிரிகேடியர் ஹெய்ன், கேணல் ஜயரத்தின, மேஜர் சொய்ஸா ஆகியோரின் வீடுகளையும் காட்டினேன். கேணல் டி சேரம், கேணல் மொரிஸ் டிமெல், ரோய்ஸ் டிமெல். சிட்னி டி சொய்ஸா, ஒஸ்ஸி கொரியா ஆகியோரின் வீடுகளையும் காட்டும்படி என்னைக் கேட்டார். எனக்குத் தெரிந்த வீடுகள் அனைத்தையும் காட்டினேன்.

**காரில் இருந்தவர் சுனில் ஹேவஹே**

இந்த வீடுகளை நான் காட்டிவரும்போது அந்தக் காரில் வேறொருவரும் இருந்தார். அவருடன் நாங்கள் பேசிக்கொண்டு சென்றோம். ரஷ்யாவுக்குச் சென்றிருந்ததாகக் கூறிய அந்த நபர் கழுத்தில் போட்டிருந்த ஒரு லேஞ்சியை எடுத்துக்காட்டினர். காற்சட்டை அணிந்திருந்தார்; அவர் கழுத்தில் டை கட்டியிருந்தார். இதன் பின் இராணுவ தலைமைகாரியாலயத்துக்கும் சென்றேன் அங்கு நானும் அமரதுங்காவும், கோர்ப்பரல் லொக்குபண்டாவையும், கோர்ப்பரல் திலகரத்னவையும் சந்தித்தேன். அந்தக் காரில் இருந்தவர் இரண்டவது எதிரி சுனில் ஹேவகே. லொக்குபண்டா பன்னிரண்டாவது எதிரியாவார்.

---

## கதாப்பிரசங்கம்

யாழ்ப்பாணம், வெள்ளி

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயத்தில் திரு பூங்குடி திரு. வி. க. ஆறுமுகம் மாலை 6 மணிமுதல் 7 மணிவரை திருவிளையாடல் கதாப்பிரசங்கத் தொடரில் 'பக்த கௌரி' என்னும் பொருள் பற்றி கதாப்பிரசங்கம்செய்வார். இரவு 7 மணிக்கு சுக்கிரவார அம்மன் உற்சவம் நடைபெறும்.

---

யாழ்ப்பாணம், வெள்ளி

செல்வி வா. பாலேஸ்வரி எழுதிய 'கடர்விளக்கு' என்னும் நூல் இன்று மாலை 6 மணிக்கு இலங்கை — அமெரிக்க கலாசார நிலையத்தில் யாழ். இலக்கிய வட்டத்தினால் அறிமுகம் செய்துவைக்கப்படும்.

---

## யாருடையவை?

யாழ்ப்பாணம், வெள்ளி

இரு ஜாதகக் குறிப்புக்கள் தொண்டமனாற்றுப் பாலத்தில் திரு. மகேந்திரராஜாவினால் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர் தகுந்த அத்தாட்சிப்பத்திரங்களுடன் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

## உண்மையான

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வேதம், தந்திரம் ஆகமம். பரம்பொருளை அடைய நமக்கு இவையிரண்டும் தேவை. நம் உள்ளங்களுக்குளெல்லாம் நிறைந்து நம்மை இணைப்பவன் இறைவன்.

தமக்குவிழா எடுத்ததற்கு நன்றி கூறுகையில் அன்பு என்ற பூதக்கண்ணடி மூலம் தமது குணங்களைப் பெரிதாக்கிக் காட்டியுள்ளார்கள் யாழ்ப்பாணத்துமக்கள் என்றார். பண்டிதமணியும், நீதியரசரும் இலக்கிய இலக்கண அறிஞர்களும் தமக்குப் பாராட்டுத்தெரிவித்தது தமக்குக் கிடைத்த பெரும் பாக்கியமெனத் தாம் கருதுவதாக திரு. கி. வா. ஜ. தெரிவித்தார். பாராட்டுக்கள் தம்மைத் திக்குமுக்காடவைத்துவிட்டதாக அவர் எடுத்துக் கூறினார். இந்த எல்லையில்லாத அன்பான உறவுகள் என்றும் நிலைபெற இறைவன் துணைபுரிய வேண்டும் என தமது சொற்பொழிவின் இறுதியில் திரு கி. வ. ஜ. கூறினர்.

விழாவின் ஆரம்பத்தில் திரு கி. வா. ஜ. வுக்குப் பொன்னுடை போர்த்திக் கௌரவித்த நீதியரசர் திரு பா. ஸ்ரீஸ்கந்தராஜா தாம் திரு கி. வா. ஜகந்நாதனுக்குப் பொன்னுடைபோர்த்திக் கௌரவிப்பதில் பெருமைப்படுவதாகக் கூறினார்;

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை தமது தலைமை உரையில் கி. வா. ஜ. 60 வயதை அடைந்தும் இளமையாக வாழ மாட்சிமையுள்ள அவரது மனைவியே முக்கிய காரணம் எனக் கூறினர். உள்ளத் தூய்மையாலும், ஆத்மீக ஞானத்தாலுமே திரு கி. வா. ஜ. உயர்வைப் பெற்றுள்ளாரென்றும் தெரிவித்த பண்டிதமணி, அவர் துணைவியாருடன் இன்னும் நீடூழிகாலம் வாழவேண்டுமெனத் தாம் பிரார்த்திப்பதாகக் கூறினர்.

வைத்தீஸ்வரவித்தியாலய அதிபர் திரு. ச. அம்பிகைபாகன், பொன். கிருஷ்ணபிள்ளை, திரு கே. பி. ஹரன், வித்துவான் பொன் முத்துக்குமாரன், ஸ்ரீ சீதாராம சாஸ்திரி, செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோரும் வாழ்த்துரைவழங்கினர்கள்.

வாழ்த்துப்பத்திரம் கொண்ட பேழையொன்று திரு கி. வ. ஜகந்நாதனுக்கு வழங்கப்பட்டது

---

## வெளியீட்டுவிழா

யாழ்ப்பாணம், வெள்ளி

உரும்பராய் சிதம்பர சுப்பிரமணியசுவாமி கோயில் ''சிதம்பர சுப்பிரமணியன் புகழ்க்கதம்பம் வெளியீட்டு விழா இன்றுமாலை 5-30க்கு நடைபெறவிருக்கிறது.

திரு. கி; வா. ஜகந்நாதன் பாடியுள்ள 1020 பாடல்களைக்கொண்ட பத்துப்பிரபந்தங்களையுடைய இக்கதம்பம் திரு. ஜகந்நாதன் முன்னிலையில் அவர் அளிக்கும் விளக்கச் சொற்பொழிவுகளுடன் வெளியிடப்படுகிறது.

யாழ்ப்பாணம் காரியாதிகாரி திரு. செ. சிவஞானம் தலைமையில் நடைபெறும்.

---

## மோதலால் ரயில் தாமதித்தது!

யாழப்பாணம், வெள்ளி

பெண்மணியொருவருக்கும் சில ஆண்களுக்கும் இடையே திடீரென்று ஏற்பட்ட ஒருமோதலினாலேயே நேற்றுக்காலை கொழும்பு கோட்டையிலிருந்து வந்த மெயில் புகையிரத வண்டி நான்குமணி நேரம் தாமதித்து யாழ்ப்பாணம் வந்து சேர்ந்ததெனத் தெரிகிறது.

வியாங்கொடையில் இந்த ரயில் வண்டியின் மூன்றும் வகுப்புப் பெட்டிக்குள் சில ஆண்களுக்கும் தனித்து இருந்த ஒரு பெண்மணிக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு அந்தப் பெண்மணி ஆண்களில் ஒருவரின் கன்னத்தை முதலில் பதம்பார்த்துவிட விஷயம் முற்றிப் பெரிய கலாட்டாவாகிக் கடைசியில் கல்பரிமாறலாகி என்ஜின் சாரதியையே காயத்துக்குள்ளாக்கிவிட்டதாம். பின்னர் புதிய சாரதி கொழும்பிலிருந்து வந்த பின்பே வியாங்கொடையிலிருந்து ரயில் புறப்பட்டதாம்.

---

## அடிக்கல் நாட்டுவிழா அழைப்பு

1966-ம் ஆண்டு ஆவணி மாதம் 3-ந்திகதி (19-8-66) வெள்ளிக்கிழமை காலை8-30க்கு வரும் சுபநேரத்தில் காரைநகர் திக்கரை முருகப்பெருமானுக்கு அபிஷேகம் நடாத்தப்படும். அதன் பின் பெருமான் திருவருளால் சந்நிதானத்துக்கருகாமையில் வே. இ. தம்பிப்பிள்ளை அவர்களால் நன்கொடையளிக்கப்பெற்ற ஆதனத்தில் கைத்தறி நெசவு நிலையத்திற்கு அத்திவாரக்கல் நாட்டப்படும். அன்பர்களை வரையும் சமுகமளிக்குமாறு வேண்டுகின்றோம். இங்ஙனம் முருகன் அடியான் த. கா. நடராசா. 863

---

## விவாகம்

யாழ்ப்பாணம்ஆனைப்பந்தியடி இராமலிங்கம் அவர்களின் சிரேஷ்ட புத்திரன் செல்வன் பாலசுப்பிரமணியத்துக்கும், உரும்பராய் தெற்கு இராசரத்தினம் அவர்கள் புத்திரி செல்வி கண்மணிக்கும் 19-8-66 (இன்று) பிற்பகல் 4-00—5-00 மணிக்கும் இடைப்பட்டசுபவேளையில் மணமகள் இல்லத்தில் திருமணம் நடைபெறும். உறவினர்களும், நண்பர்களும் இதனை அழைப்பாக ஏற்று கலந்துகொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம். மணமகன் முகவரி; 122/2 பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். அழைப்பாளர்கள் T. K. இராசரத்தினம், (P. S. டிஸ்பென்சரி, யாழ்ப்பாணம்) எவ். இராசரத்தினம் (உரும்பிராய்).

864

---

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்யுங்கள்

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் வெண்கோவில் மேலை வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org